ஓம்தத்ஸத்.

ஏகமேவாத்விதீயம்.

# தத்துவபோதினி.

பு. ௩.] சென்னைப்பட்டணம் ௧௮௬௬ வரு நவம்பர்மீ ௧௫உ. [இல. ௬.

ஏகமேவாத்விதீயம், ஸத்யம்ஜ்ஞாநமநந்தம்ப்ரஹ்ம, ஶாந்திஸ்ஸர்வத்ர ஸூத்ரம், ததோ

யத்ரத்ர தாஸம் தத்ராஶ்ரவணீயம், யதா தத்விசார்ய தாஸ்யேவதி, ஸுமே

தமேவார்க்ஷேவமேவாவியதி.

ஸத்யமேவஜயதே நாந்ருதம்.

விஷய அட்டவணை.


௧. கடவுள்துதி.................... ப. ௧௧௧
௨. விளம்பரங்கள்.................... ௧௨௧
௩. தெலுங்கு தத்துவபோதினி விளம்பரம் ௧௨௨
தத்துவபோதினி.
௪. வேதாந்தவிஷயம்.............. ௧௨௨
௫. சந்தேகவிளக்கம்.............. ௧௨௭
௬. கடிதக்குறிப்பு.................. ௧௨௯
௭. வேளாண்மை..................... ௧௨௯
௮. மநுநூல்........................ ௧௩௧
௯. பிரம்மதருமம்................ ப. ௧௩௩
௧௦. பேகன்வியாசம்................ ௧௩௪
௧௧. உபநிஷத்து..................... ௧௩௪
௧௨. மாத்ருவாச்சல்லியம்........... ௧௩௫
௧௩. மிஸ்கார்பெண்டர்............... ௧௩௬
நிருபங்கள்.
௧௪. பெண்களுக்குக்கல்வி......... ௧௩௬
௧௫. பெங்களூர்வேதசமாஜம்....... ௧௩௬
௧௬. தேவாரப்பதிகம்.............. ௧௩௭
௧௭. சந்தாதாரர்அட்டவணை.......... ௧௩௮


சத்தியமே சக்தி—தத்துவமே சித்தி.

## கடவுள்துதி.

### இராகமாலிகை - ரூபகதாளம்.

பல்லவி.

நலமாயருளிந்நாட்டை - பிரமாவுன்றன்

நலமாரபிமானத்தால்.

அனுபல்லவி.

உலகமோகனுவுன்ற - னலகிலாவருளினல்,

புலவராளியேயிங்கு - நிலைபெறும்படியாக... .....(நல.)

சரணங்கள்.

க. நன்மைக்காம்போதினில் - ஜன்மஸபலமான,

தன்மப்பயிற்சியாலே - மேன்மையளிக்கும்ஸ்ரீயை,

பன்முறையும்மேவி - வன்மனத்தோடிங்கு,

கன்மப்பயிரவித்து - ஸன்மதங்கொண்டாட...............(நல.)

உ. அஞ்சிவிலகரிய - பஞ்சமாபாவமெம்

நெஞ்சினையெப்போதும் - நஞ்சாஹரிக்காதெம்

வஞ்சகனுவுமுன் - அஞ்செழுத்தைப்பாடி,

உன்சீர்தருபாரில் - கொஞ்சிமகிழ்ச்சியுற.....................(நல.)

ங. எங்குங்கலியாணம் - பொங்கிதழையவே,

சங்கராபரண - மெங்கட்குநீதந்து,

நன்குவசந்தமொ - ருங்கநிலைக்கவே,

புங்கானுபுங்கசா - ரங்காத்துமென்மேலும்..............(நல.)

ச. அன்பியாக்கடையோரு - மின்பமடையவென,

முன்புதனியாசி - யெம்போல்வர்க்கீயவுன்,

கம்பீரக்காப்பினில் - கம்பமின்றிவாழ,

நின்பந்துவராளி - தம்பமாய்வேரூன்றி......................(நல.)

ரு. துன்பவிளைவினை - முன்புசுருட்டிக்கொன்று,

நின்பதமதனி - லாம்பரிவுள்ளவுன்,

அன்புவுதயமாகி - நம்பினபக்தர்கள்,

இம்பர்மத்தியமாவதில் - சம்பிரவமாய்மூழ்க...........(நல.)

---

## விளம்பரம்,

இந்தச் சென்னைத் தத்துவபோதினியை வாங்க மனமுடையவர்கள் மயிலாப்பூரில் தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் வேதஸமாஜத்தின் காரியதர்சியாகிய-பா. சுப்பராயலு செட்டியார், பி. ஏ. பி. எல். அவர்களுக்கு எழுத்துமூலமாய்த் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

## இதற்குச் சந்தாவிவரம்.

| | |
|---|---|
| சென்னைப்பட்டணத்தி லுள்ளவர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்....................... | க - அ - 0 |
| அதற்கு வெளியிலுள்ளவர் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய். | உ - 0 - 0 |
| பத்துப்பிரதிகளுக்கு அதிகமாய் வாங்கும் வெளியிலுள்ளவர்கள் தபால்கூலியுடன்சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய்.................. | க - கஉ - 0 |

இதற்குச் சந்தாதார்கள்தங்கள்சந்தாக்களை யந்தந்த வருஷத்தில் முன்பணமாய்க் கட்டவேண்டியது. மேமாசத்துக்கு மேமாசம் இதற்கு வருஷமாய்க்கொள்ளவேண்டியது. வருஷம் நடுவில் வாங்கத் தொடங்குவோர்க்குச சந்தாவீதம் - அ- அணு உயர்த்தப்படும்.

வெளியிலிருந்துசந்தா அனுப்பவேண்டியவர்கள் தபால் முத்திரைகளனுப்பலாம். ஆனல், அப்படி யனுப்பப்படும் முத்திரைகளை மாற்றுவதற்க்காக,ரூபாய் ஒன்றுக்கு - ஒரு அணு வீதம்-வட்டம்சேர்த்து அனுப்பவேண்டியது,

இந்தப் பத்திரிகையின் சந்தாதாரர்களும்,, பங்குக்காரர்களும், இடம் மாரும்போது அந்தவிவரத்தைத் தயைசெய்து காரியதர்சிக்குத் தெரிவிக்கவேண்டியது.

## புஸ்தகவிளம்பரம்.

| | |
|---|---|
| கிரந்தத்திலும், தமிழிலும் இயற்றப்பட்டபாலவியாகரணம். | 0 - ச - 0 |
| தபால்கூலி........... | 0 - க - 0 |
| தெலுங்கு பாலவியாகரணம்... | 0 - ச - 0 |
| தபால்கூலி........... | 0 - க - 0 |
| வேதஸமாஜத்தார் முதல் விண்ணப்பம் விக்கிரஹ ஆராதனத்தைக்குறித்தது நன்ருய் பயிண்டுசெய்தது,........... | 0 - அ - 0 |
| தபால்கூலி........... | 0 - உ - 0 |
| ஷை மட்டபயிண்டுள்ளது... .. | 0 - எ - 0 |
| தபால்கூலி........... | 0 - உ - 0 |
| வேத சமாஜத்தார் இரண்டாவது விண்ணப்பம் பெண்கள் கல்வியைக்குறித்தது........ | 0 - அ - 0 |
| தபால்கூலி........... | 0 - உ - 0 |
| தமிழில்ஸ்தோத்திரபாடம்பிரதி | 0 - க - 0 |
| தபால்கூலி........... | 0 - க - 0 |
| கஅகூ0௵ மேமாசம் முதல் கஅகூகூ௵ ஏப்பிரல்மீ வரையிலுள்ள தத்துவபோதினி பயிண்டுசெய்தது. ...... | ரு - 0 - 0 |
| தபால்கூலி......... .. | 0 - ச - 0 |

வெளியிலுள்ளவர்கள் புஸ்தகம் ஒவ்வொன்றுக்கும் குறித்த தபால்கூலி சேர்த்தனுப்பவேண்டியது.

## நிருபக்காரருக்கு விளம்பரம்.

இந்தப்பத்திரிகையில் பிரசுரமாகும்படி தயைசெய்து நிருபமெழுதியனுப்பும் கனவான்கள், அதுபிரசுரமாக வேண்டியதற்கு முன்மாதமே, உ0௨ க்குள்ளாக அந்த நிருபங்கள் எங்களிடம் சேரும்படி

அனுப்புவார்களாகில் வெகு உபகாரமாக விருக்கும்.

அப்படி யனுப்பப்படும் நிருபங்களில் நிருபக்காரருடைய இருப்பிடமும் கையெழுத்துமில்லாதபக்ஷத்தில் அவைகளை ப்பிரசுரப்படுத்துவது சாத்தியமா யிருக்கமாட்டாது.

எங்கள்கொள்கைகளை ஆக்ஷேபித்தெழுதினால் நாங்கள் பிரசுரம்செய்யமாட்டோமென்கிற கருத்தினாலே நிருபமெழுத மனமுடைய பலர் எழுதாமலிருப்பதாய் நாங்கள் கேள்விப்படுகிறோம். உண்மை வெளியாகவேண்டியதே எங்கள்கருத்தாகையால், எங்கள் கக்ஷிகளை யாக்ஷேபித்தெழுதப்படும் நிருபங்களை நாங்களிதில் பிரசுரஞ்செய்வது மாத்திரமேயன்றி, பமுதானவையாய்த் தோன்றும் ஆக்ஷேபங்களுக்குளெங்களாலியைந்தவரையில்சமாதானம் சொல்லவும் சரியான ஆக்ஷேபங்களை ஒத்துக்கொள்ளவும் சித்தமாயிருக்கிறோம்.

விஷயங்களின் மேலுள்ள குணதோஷங்களை யெவ்வளவெடுத்துச் சொன்னாலும் எங்களுக்குச் சம்மதமே யாகிலும், வியக்தி தூஷணங்களடங்கிய நிருபங்களை இதில் பிரசுரப்படுத்த இயலாதாகையால் அதற்காக மன்னிக்கக்கோருகிறோம்.

கடைசியாக உண்மைவெளியாகி நன்மைபரவவேண்டுமென நாங்கள் முயலுகிறவாறே நிருபக்காரரும் பரிசுத்தசிந்தையுடன் தங்கள்கருத்துகளை வெளியிடுவார்களென்று நம்புகிறோம்.

---

## விளம்பரம்.

### தெலுங்கு தத்துவபோதினி.

தத்துவபோதினி என்னும் இப்பத்திரிகை, தமிழில் பிரசுரஞ் செய்வது போலவே தெலுங்கிலுமொன்று இயற்றக் கருதியிருக்கிறோம். இத்தெலுங்குதத்துவபோதினியும் தமிழைப்போலவே சுமார் பதினாறுபக்கங்களை அடங்கியதாயிருக்கும். விஷயங்களும் சற்றேறக்குறைய தமிழ்பத்திரிகைபோலவே யிருக்கும். கடவுள் அநுக்கிரகஞ் செய்வாராகில், வருகிற நவம்பர்மாதம்முதல் இதைப்பிரசுரஞ்செய்ய எண்ணியிருக்கின்றோம். ஷ நவம்பர்மாத முதல்,முதல்தேதிதெலுங்குபத்திரிகையும்,கரு-ஒ தமிழும்அச்சிடவேண்டியதாயிருக்குமாதலால்;வர்த்தகருக்கும்மற்றுமுள்ள ஜனங்களுக்கும் உபயோகப்படத்தக்க தேச வர்த்த மானங்களையும், அகவிலை முதலிய பலசங்கதிகளையும்சேர்க்கயோசித்திருக் கிறோம். இத்தெலுங்கு தத்துவபோதினி, நவம்பர் முதல்ஏப்ரல்வரையில், ஆறுமாதத்துக்கு முதல்புத்தகம் முடித்து மேமாதந்தொடங்கி, இரண்டாவதுபுத்தகமாகச் செய்யக் கருதுகின்றோம். இவ்வாறு மாதத்துக்கு, முன் கொடுக்கப்படவேண்டிய சந்தாவிவரம்.

| | |
|---|---|
| அரைவருஷசந்தா...... | 0 - கஉ - 0 |
| தபால்கூலி.. ...... | 0 - ரு - 0 |

மேற்குறித்ததெனுகுபத்திரிகை இம்மாதம் முதல்தேதி பிரசுரஞ்செய்யப்பட்டிருக்கிறது. வேண்டியவர்கள்அறிவித்துக்கொள்ளலாம்.

---

## தத்துவபோதினி.

சோதரர்களே!

முந்தியசர்ச்சையில் வேதாந்தத்தின் பொதுநோக்கம் இன்னதென்றும், அஃது பாஹியசின்னங்களையாவது வெறுங்கொள்கைகளையாவது பாராட்டுவதில்லையென்றும்,வேதங்களெனப்படும்புத்தகங்களாலாவதுவைதிககர்மங்களாலாவது ஆசாரியாபிமானத்தினாலாவது, மோக்ஷமென்னப்படும் பேரானந்த மடையொணாதென்றும்,மற்று இஃது நமதுள்ளத்தில்குடி

கொண்ட ஈஸ்வரனுடையமெல்லியவாக்
கைநலமெனயறிந்து அவனோடுநேரேசம்
பாஷிப்பதினாலன்றி அடையக்கூடாதென்
றுமுரைத்தோமல்லவா? மேலும்இஃதுசா
த்தியமா.சாத்தியமல்லவாவென்பதைப்ப
ற்றி பின்பு யோசிப்பதாகவும் எச்சரித்
தோமல்லவா? இச்சம்பந்தத்தைப்பற்றியு
ம் அவனருள் நமக்கு நேரேஎவ்வாறுசித்
திக்குமென்பதைப்பற்றியும் விசாரிக்குமு
ன்பாக, இவ்விஷயத்தில் மார்க்காந்திரமி
ல்லை என்பதை நம்மால் கூடியவரையில்
பரிஷ்காரமாய் விளங்கச்செய்வது அத்தி
யாவசியகமென்று கருதுகின்றனம். என்
றால் பாரமார்த்திகத்தை யுணர்ந்து நித்
தியாநந்தமடைய வழி யாதென்று வின
வுங்கால், சிலர், வேதங்களெனவும், சில
ர்த்தீர்கதரிசிகளெனவும், சிலர் ஆசாரிய
ர்களெனவும், சிலர்நிர்ஹேதுகமானஈஸ்
வரகடாக்ஷமென்றும், இவ்வாறு பலவி
டைகளை உரைக்கின்றனர். இவற்றில் ஒ
வ்வொன்றேனும், எல்லாங்கூடியும் நா
ம்கருதியபயனையடைவிக்க சாத்தியமாக
மாட்டாதென்பதே எங்களுடைய கக்ஷி.
இஃது வேதத்தால் முடியாதென்பதை
ப்பற்றி சிலபிரஸ்தாபம் செய்வதாவசிய
கமென்று யோசிக்கின்றோம். மனிதருக்
கு மோக்ஷப்பிரதமான ஞானத்தைவிள
க்க, தம்மிலும் புறம்பாகிய வோர் வேத
புத்தகமிருக்கவேண்டும்; இவ்விதபுத்தக
மின்றி மனிதர்ஞானம்பெற்றுக் கடவுளை
அறிவது அசாத்தியமென்று ஒவ்வொரு
மதத்தினரும்வற்புறுத்திக்கூறுகின்றனர்.
இவ்விதக்கொள்கைக்கு ஆதாரமாகச்சொ
ல்லப்படுகிறமுகாந்திரங்களாவன—சப்த
ப்பிரமாணமின்றியே அனுமானப்பிரமா
ணத்தாலும் அநுபவத்தாலும், வைதிகமா
ர்க்கத்தையறியமுயன்ற அனைவரும் பல
விரோதமான கொள்கைக் காளாவதுமன்
றி, அவ்வனந்தபேதத்தால் கவலையுற்று
தங்களுக்குள்ள விஸ்வாசமானது நீங்கி
நாஸ்திகராகின்றனர். மேலும் இவ்விதவெ
ளிப்படையான புத்தகத்தாலன்றி கடவு
ளிருப்பையும் நாம் நிச்சயமாய் அறிந்து
கொள்வது கூடாமை. அவ்வாறே, கடவு
ளிடத்தும் மனிதரிடத்தும் நாம் செலுத்
தவேண்டியகடமைகள் இத்தன்மையவெ
ன தெரிவது மசாத்தியம். ஆகையால், ம
னிதருக்குள் எத்தேசத்திலும் வேதம்எ
ன்னப்படும் வெளிப்படையான தெய்வ
ச்சொல்லொன்றிருக்க வேண்டும், அஃதி
ல்லாமற்போகுமாயின், மானிடருஜ்ஜீவி
ப்ப தரிதென்று செப்புகின்றனர். இது
வன்றி கடவுளின்தன்மையானது நாமறி
யக்கூடிய யாவற்றுக்கும் புறம்பானதா
கவும், நமது, புத்தி யுக்திகளால் எட்
ட முடியாததாகவும், அவர் நேரே தி
ருவாய் மலர்ந்தருளினாலன்றி, அவனை
யறியவொண்ணாதென்றும் சொல்லுவர்.
இஃதெவ்வாறாயினும் உலகத்தில் பெரு
ம்பான்மையோர் நாம் கடைத்தேறுவத
ற்கு வேதம் அத்தியாவசியகமென்று ந
ம்புகின்றனர் என்பதற்கையமில்லை. ஆ
யினும் இவ்வேதம் யாது என்பதைப்ப
ற்றிமாத்திரம் பல அபிப்பிராயபேதமு
ண்டு. கடவுள் தன் ஸ்வரூபத்தைப் ப
ற்றியும், நமது பூர்வோத்தர ஜன்மங்க
ளைப்பற்றியும், இவ்வாழ்க்கையின் பய
னைப்பற்றியும், இங்கு நாம் நடந்துகொ
ள்ளவேண்டிய வழிகளைப்பற்றியும் இனி
நாம் அடையக்கூடியபேறைப்பற்றியும் ந
மது ஆத்மஉஜ்ஜீவனத்துக்கு அத்தியாவ
சியமாகிய பலரஹஸியங்களை நாம்சந்தே
கமின்றி அறிந்தொழுகும்பொருட்டு கட
வுள்நமக்கு புலப்படக்கூடிய ஸ்தூலவுரு
வங்கொண்டோ, அசரீரவாக்கினாலோ ம
ற்றெவ்விதத்திலேயோ வெளிப்படையா
கதிருவாய்மலர்ந்தருளியதே வேதமென்
றுபலரும்; அத்தேவன் எப்பொழுதும் ந
மதுஇருதயகுகையில்வாசமாய் ஒவ்வொ
ருகணமும்நமதுமனதைமெல்லெனத்தா
க்கி ஹிதபோதஞ்செய்து நாம்செய்யக்கூ
டிய ஒவ்வொரு காரியத்தின் நன்மைதீ
மைகளில் நலமீதென்றும் தீமை யீதெ
ன்றுமுணர்த்தி தீமைஅகற்றி நலத்தை
நாடும்படியேவி உண்மையுணர்த்திடும் ப
ரமகுஹிய பரமோத்தமமான மெல்லிய
திருவசனமே, நமைக்கடைத்தேறச் செய்
யும்படியான சத்தியமும்சம்பாவிதமுமா
னஒப்பற்றவேதமென்றுசிலரும், உரைக்
கின்றனர். பிற்கூறியதேவேதாந்தத்துணி

வென்பதைச் சுட்டிக்காட்டவேண்டியதில்லை. இவைகளை பகுத்தறியும்பொருட்டு,முந்தியதை,லிகிதவேதமென்றும்பிந்தியதை ஆத்மவேதமென்றும்குறிப்போம். லிகிதவேதமுண்டா வில்லையா,உண்டாயின் அதனால்கருதியபயன்கைக்கூடுமாவென்பதைப்பற்றிதான் இன்றுயோசிக்கவேண்டியது. மேற்கூறியபடிலிகிதவேதிகள் அஃது இன்றியமையாததென்பதே தங்கள்கக்ஷிக்கு முக்கியஆதாரமாகக்கொள்ளுகின்றனர். இந்தஅநிவாரியமான்ஆவசியகத்தைப்பகுத்தறியுங்கால், அஃது மூன்று வகைப்படும். க-வது, கடவுளின்தன்மை நாம்நேரேஅறியக்கூடியதல்ல; உ-வது, நமது புத்தி யுக்திகள் அங்கங்கே அளவற்றபேதங்களைப் புகட்டுகின்றமையால் அவற்றைநம்பவொண்ணாது ;௩-வது,வேதத்தாலன்றி நமது கடமைகளைப்பற்றி நிர்விவாதமானவும் நிஸ்ஸந்தேஹமானவும் விதிகள் ஏற்படுவ தசாத்தியம். என்பனவே. மனிதரெல்லாரும்மிதஞானிகள். கடவுளின்தன்மையோவெனில் அளவிடக்கூடாததும் அந்தமற்றதும் அறிவுக்குமெட்டாதஅத்புதமுமாயிருக்கின்றது. அவரைப்பிரத்தியக்ஷமாய்க் காண்பதசாத்தியம். அனுமானத்தா லூகிக்கலாகாதோவென்றாலோ, அவருக்கும் அவரது அற்புதமான செயலுக்கும் ஒப்பிட்டுக்காட்டக்கூடியது யாதொன்று மில்லாமையாலும், சாதாரணமாய் சிருட்டிப்பொருளின் விஷயமாய்க்கூறப்படும் காரணகாரிய நிரூபணம் அவர்விஷயத்தில் பயன்படாவாதலின், அனுமானத்தாலுமறிவது கூடாமையாயிருக்கின்றது. சகலவிஷயங்களிலும் அந்வயிக்கிற காரணகாரிய நிரூபணம் கடவுளின் விஷயத்திலேன் அந்வயிக்கமாட்டாதென்றாலோ, இச்சித்தாந்தத்தின் ஸ்ருபத்தைச் சற்று விஸ்தரித்தால் அஃதுவிளங்கும். உலகத்தில்நாம் காணக்கூடியவரையில் சகலமும் இக்காரணகாரிய சித்தாந்தத்துக்கு ஒத்தேயிருக்கின்றது. இதைச்சிலதிஷ்டாந்திரங்களால் உணர்த்துவோம். பூமியின் கண்கொழுமையிருக்குமாயின் செடிகள் செழித்தோங்குகின்றன. இவ்விடத்துபூமியின்கொழுமை காரணமாயும், செடிகளின்செழிப்பு காரியமாயும் இருக்கின்றது. நாமறிந்தவரையில் இக்காரணகாரியம் ஒன்றையொன்று இடைவிடாதிருத்தலால் ஒன்றின்இருப்பைக்கொண்டு மற்றொன்றி னிருப்பையும் ஊகிக்கலாகும். ஆகவேஎவ்விடத்திலாவது செடிகள்செழிப்புடன்ஓங்குமாயின், அங்கு பூமிகொழுமையுடையதென்றும்நாம்கண்ணால்காண்கின்ற காரியமாகிய செழிப்பைக்கொண்டு, காரணமாகிய பூமியின்கொழுமையையூகிக்கலாகும். அவ்வாறே, நெருப்பு புகைகின்றதென்பதை நாமறிவோம். இந்நெருப்பும் புகையும், காரண காரியங்களாய், ஒன்றையொன்று விடாதிருத்தலையும் அறிவோம். ஆகையால் புகையுள்ளவிடத்தில் நெருப்பையும், நெருப்புள்ளவிடத்தில், புகையையும் ஊகித்துக் கொள்ளலாம். இவ்வாறே உலகமாகிய காரியத்தைக்கொண்டு கடவுளாகிய காரணத்தை அறியவொண்ணாதோவெனில், நெருப்பு புகைவதைப்போல் கடவுளைப்போன்றகாரணமானது, உலகத்தைப்போன்றகாரியத்தை உண்டாக்கினதை நாம்எங்கும் பார்த்ததில்லை. கடவுளில்லாதவிடத்து உலகமில்லாமற்போனதையாவது, உலகமில்லாதவிடத்து கடவுளில்லாமற்போனதையாவது கண்டறியோம். அநுமானத்தின் தன்மையைச் சற்று ஆழநோக்குங்காலத்து பிரத்தியக்ஷத்தையடுத்தும், பிரத்தியக்ஷப்பிரமாணத்தினோரினமாகவுமிருக்கின்றது. பிரத்தியக்ஷமாய் நாம்காண்கிற இரண்டுபொருள்களின் சம்பந்தத்தையுணர்ந்து அச்சம்பந்தத்தை மீண்டும்பப்பொருள்களைக்காணுமிடத்தாவது, அவைகளைப்போன்றமற்ற பொருள்களின் விஷயமாயாவது ஊகிப்பதேஅநுமானமாகும். நெருப்பில்லாதவிடத்தில் புகையில்லாமற் போவதையும், புகையில்லாதவிடத்து நெருப்பில்லாமற் போவதையும் காண்பதினாலுமல்லவோ அவைகள் காரணகாரியசம்பந்தமுடையவையெனச்செப்புகின்றோம். மேலும், மழை பெய்தால்பூமிநனையும், ஆயினும் மழைபெய்யாவிடில் பூமி நனையாதென்று

வது, பூமிநனைந்திருப்பதால், மழைபெய்ததென்றாவது சொல்ல முடியுமோ? மழை பெய்யாத விடத்தும் பூமி வேறு ஜலத்தினால் நனைந் திருப்பதையும், பூமி நனைந்திருந்தும், மழைபெய்யாமலிருப்பதையு மறிகின்றமையால் இவைகளில் ஒன்றை ஒன்றினால் ஊகிக்கமுடியாது. பிரபஞ்சமில்லாதவிடத்தையு மறியோம், அதன்தன்மையுமறியோம். கடவுளிருக்குமிடத்தையுமறியோம், அதன் தன்மையுமறியோம். ஆகையால்ஒன்றில்லாதவிடத்து மற்றொன்றுமில்லை எனவுணர்க்கவாவது, ஒன்றிருக்குமிடத்துமற்றொன்றுமிருக்கவேண்டுமென்றாவதுஊகிப்பதசாத்தியமாகின்றது. இதுநிற்க, குலாலன் பானைசெய்வதுபோலும், தச்சன்மேஜைசெய்வதுபோலும், சிற்பிவீடுகட்டுவதுபோலும், கடவுள்உலகத்தைப்படைத்தாரென்று ஊகிக்கலாகாதோவெனில், இதையும் சற்றுயோசிப்போம். குலாலன் பானைசெய்கிறான் என்னுங்கால், சிருஷ்டிப்பொருளா யிருக்கிற மண்ணுக்கோர்வித ரூபத்தை யுண்டுபண்ணுகிறானேயன்றி வேறல்ல. கடவுளோவெனில் ஒன்றுமில்லாதவிடத்து இவ்வுலகத்தைப்படைக்கின்றனர். இஃதுஅடியில்குறித்தசுருதியால்காண்க. ஐதரேயஉபநிஷத்துத்துவக்கத்தில், "முதலில இவர் (கடவுள்) ஒருவர்மாத்திரம் ஆத்மாவாக விருந்தார். அசைவுள்ள வேறு யாதொன்றுமில்லை." ஆகையாலிவ்விரண்டு காரியங்களுக்கும் வாஸ்தவ்வியமாய் ஒற்றுமையில்லை. குலாலனைப்போல் கடவுளும் நித்தியமாயுள்ள பிரபஞ்சத்துக்கு விகாரமுண்டாக்குகின்றாரேயன்றி வேறல்லவென சிலர் உணர்க்கலாகும். அவ்வாறாயின் யாதொருகாரணமின்றியேபிரபஞ்சமானது தானாகவிருக்கக்கூடு மென்பதை ஒத்துக்கொள்ளவேண்டியதாகின்றது. கேவலம் ஜடபதார்த்தமாகிய உலகமே தானாயிருக்கலாகுமாயின், பிராணனோடும்,செயலோடும், இச்சையோடுங் கூடிய பிராணிகள் தாமாய்ஜனிக்க வென்னஆடங்கமோ அறிகிலோம். இவ்வாறு மேற்கூறிய மூன்றுஆதாரங்களில் முதலாவதைப்பற்றி உதாரணத்தின்பொருட்டு விரிவாகவுரைத்தபோதிலும், இவ்வாக்ஷேபங்களுக்குள் சமாதானமும் செப்பவேண்டியிருப்பதால் இவற்றை பின்னிட்டு சாவதானமாகயோசிப்ப துசிதமென்று கருதுகின்றோம். ஆகையால் கடவுளுடையகுணங்களைப்பற்றியும்நமதுகடமைகளைப்பற்றியும்விசாரிக்குமிடத்தும்,நமதுயுக்தியானது முற்றும்பயன்படாது என்பதையும் நிரூபித்துக்காட்டலாமெனக்குறிப்பதே இங்குபோதுமானதாயிருக்கின்றது. பிரத்தியக்ஷத்தாலும், அனுமானத்தாலும் கடவுளையறிவதிவ்வாறு கூடாமையாகவிருத்தலால், இதற்கு சப்தப்பிரமாணம் இன்றியமைத்ததாகின்றதென்பதே விதிதவேதிகளின்சக்ஷி. ஆகையால் விதிதவேதமின்றி நாம்கடைத்தேற வேறுவழியில்லையென்றும் ஆக்ஷேபிக்கின்றனர். இவ்வாக்ஷேபங்களெல்லாம் சரியானவையென்றாவது, இவைகளுக்கு சமாதானமுரைக்க முடியாதென்றாவது யாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை. நாமெவ்வளவு அறியவேண்டுமோ அவ்வளவு வேதமின்றியே, பிரத்தியக்ஷத்தாலும்பிரமாணத்தாலுமறியக்கூடுமென்றேநினைக்கிறோம். இதற்குபின்னிட்டு ஆதாரமுங்கூறுவோம். இஃதெவ்வாறிருப்பினும், கடவுளே நேரில் வந்து நமது கடமைகளைப்பற்றியும், நாம் அறிய வேண்டிய பாரமார்த்திகத்தையும், தனது திவ்வியஸ்வரூபத்தைப்பற்றியும், தனதுகைப்பட எழுதப்பட்டஒருபுத்தகத்தைத்தந்தருளுவாராயின், இதுசர்வோத்கிருஷ்டமான துணையாகுமென்பதை யொருவரும் ஆக்ஷேபிக்கமாட்டார்கள். ஆயினும், இஃதுசாத்தியமோ வென்பதைமாத்திரம் சற்று யோசிக்கவேண்டும். விதிதவேதத்தின் முக்கியமானகருத்து மனிதர்நிஸ்ஸந்தேகமாய் கடமைகளையறிந்து நிர்விவாதமாயும் கக்ஷிபேதமில்லாமலும், ஒருமைப்பட்டு வாழ்ந்து அக்கர்த்தனை அடைய வேண்டுமென்பதேயாம். கடவுள்நேரேயொருவேதத்தை யுண்டுபண்ணிக் கொடுத்தாலும், இஃது மேற்கூறிய பயனளிக்குமோ இதற்கு விக்கினங்களொன்றும் நேரிடமாட்டா

வோ வென்பதைப்பற்றியும் சற்று விசாரிப்போம். சர்வஜீவ காருண்ணியராகிய கடவுள் நித்தியாநந்தத்தைப் பற்றிய இவ்வளவு பிரயோஜனகரமான காரியத்தைச் செய்யுமிடத்து அஃது எல்லாருக்கும் பொதுவாய் பயன்படும்படி செய்வாரேயன்றி சிலருக்குமாத்திரம்பிரயோசனப்படும்படி செய்யமாட்டாரல்லவா. ஆகையால் உலகத்துக்கெல்லாம்ஒரு வேதமிருக்கவேண்டியதுமன்றி, அவ்வேதம்உலகமெல்லாம்அறியக்கூடியஓரேபாஷையிலிருக்கவேண்டும். அவ்வொருபாஷையும்என்றும்விகாரமில்லாததாயும் பலபொருள் கொள்ளாததாயுமிருக்கவேண்டும். ஏனெனில், ஒருவேதமின்றி பலவேதங்கள் கொடுக்கப்படுமாயின், அவையெல்லாம் ஒரேகொள்கையுடையனவாக வேண்டும். அல்லதுபலகொள்கை யுடையனவாயிருக்கவேண்டும். எல்லாம் கொள்கையில் வித்தியாசமின்றி அபேதநிலையுணர்த்துமாயின், பலவாயிருப்பது அநாவசியக மாகும். பேதகொள்கையினால்தான்வேதம்பலவாகவேண்டும். மனிதசாமான்னியரும் ஏகதன்மை யுடையவராக அவர்களின்பொருட்டு, பேதக்கொள்கையுள்ள வேதங்களைஇயற்றுவது அசம்பாவிதமானதுமன்றிநியாயத்துக்குமிசைந்திருக்கவில்லை. அவ்விதபேதத்தைக்கற்பிக்குமிடத்து அப்பேதத்துக்கோராதராமிருக்கவேண்டும். இப்பேதம், நமது சரீரத்தைப்பற்றியாவது, நமது குணாகுணங்களைப்பற்றியாவது, குலத்தைபற்றியாவது, தேசத்தைப்பற்றியாவது, வேறெந்தகாரணத்தைப்பற்றியாவதுசெய்யப்படவேண்டுமேயன்றி நிஷ்காரணமாய்ச்செய்வது அறிவின்தன்மைக்கேற்றதாயிருக்கவில்லை. சரீரத்தைப்பற்றியோசிக்குமிடத்து பொதுவாகமனிதரெல்லோரும் ஒருவகைச்சரீரமுடையவர்களேயன்றி வேறல்ல. சரீரம்பொதுவாய்ஒருவிததன்மையதாயும், அங்கக்கூறிலும், வன்மையிலும், முகசாடைமுதலியபலவிஷயங்களிலும் மனிதர்வேறுபட்டிருக்கிறார்களென்றால், அப்பொழுது ஒவ்வொருமனிதனுக்கும் தனியாகவொவ்வொருவேத மியற்றப்படவேண்டியதாகநேரிடும். ஆகையால்இவ்விபரீதாக்ஷேபத்தையொருவரும்செய்யார்கள். குணாகுணங்களிலும்மனிதர்பொதுப்பட சமானராயினும, இனப்பிரிவால்பலவாயிருத்தலால் இதைப்பற்றிவேதம் இயற்றுவதும்அசாத்தியமாகும். குலத்தைப்பற்றியோவென்றாலோ, குலமின்னதென்றுவிசாரிப்பதுஅதிகசங்கடமாகின்றது. குலம் என்பதுபிறப்பு அல்லதுஜாதியென்னலாம். ஒருமனிதனுடைய சந்ததியாரெல்லாம் அவன்குலத்தாராவார்கள். இவ்வாறு ஒவ்வொருகுடும்பமும் ஒவ்வொரு குலமாகும்; மேலும்எல்லாகுடும்பமும் ஆதியில்ஓரேமனிதனுடைய வம்சமாகவேண்டுமாதலால், எல்லாகுடும்பமும்சேர்ந்து ஓரேகுலமாகவேண்டும். ஆகையால்வேதம்ஒன்றாயிருக்கவேண்டுமல்லது ஒவ்வொரு குடும்பத்துக்கும் தனிவேதமேற்படவேண்டும். அப்படிக்கின்றி ஆதியில்கடவுள் உலகத்தைச்சிருஷ்டிக்குங்கால் சிலமனிதரைஏககாலத்திலுண்டாக்கி, அவர்கள்வம்சத்தாரை வெவ்வேறுகுலமாகவைத்துஅந்தந்தகுலத்துக்கொருவேதம்கொடுத்திருக்கலாகாதோ வென்னலாம். இஃதுசாத்தியமாயினும் பின்னிட்டு இக்குலத்தார் ஒருவரோடொருவர் சம்பந்தஞ்செய்து அளவிறந்த குலங்களையுண்டாக்கின் இவைகளுக்கெல்லாம் வேறுவேதங்களேற்பட வேண்டுமல்லவா ?

அன்றியும் நம்மவரில் சிலர் பாமரருக்கொருவேதம் பண்டிதர்களுக் கொருவேதமென் றுரைப்பதுபோல், சரீரத்தைப்பற்றியாவது, குலத்தைப்பற்றியாவது பலவேதங்க ளேற்பட்டபோதிலும், இன்னின்னார் இந்தசரீரத்தையுடையவர்கள் இன்னகுணங்களை யுடையவர்கள், இன்னகுலத்தைச்சேர்ந்தவர்கள்என்னும் வியவஸ்தையைப்பற்றி அளவிறந்தசந்தேகமுண்டாகவேண்டுமாதலால், இச்சந்தேகம் தெளியச்செய்வது யாரால்முடியும். ஒவ்வொருவனும் தனக்கிஷ்டமானபடி சித்தாந்தஞ்செய்துக் கொள்வானாதலால் வியவஸ்தைகெட்டு அளவிறந்தகலக்கத்துக்கு இடமுண்டாகுமாதலால் நிச்சயமற்றுநீதியழியநேரிடும். ஒவ்வொருதேசத்து

சகும் ஒவ்வொரு வேதமுண்டாகலாகாதோவெனில், தேசங்களின்எல்லைகள் என்றும் நிலையாகவிருக்கவேண்டும். ஒருதேசத்தார் மற்றொருதேசத்தாரோடு கலக்கவும், மற்றொருதேசத்தில வாழவுங் கூடாது. மனிதரை இவ்வாறு கட்டுப்படுத்தவேண்டுமென்றால், அவர்களுடைய சுவேச்சையைநீக்கி அவர்கள்அறிவைக்கட்டித்தான் செய்யவேண்டும், இல்லாவிடில் தேசங்களின் எல்லைகள் மாறுந்தோறும் வேதமும்மாறவேண்டும். ஆகையால் எவ்விதத்தில் யோசித்தபோதிலும் வேதம்பலவாயிருப்பதில் சந்தேகநிவர்த்திக்கு அநுகூலமாயிராமல் விசேஷபிரதிகூலமாகவேயிருக்கின்றது. ஆகையால்விகிதவேதத்தால்கருதப்பட்டபயனையடையவேண்டுமானால் அஃது தனியாயிருக்கவேண்டும். இத்தனியானவேதம் இத்தன்மையதா யிருக்கவேண்டுமென்பதைப் பற்றியும் மற்றசங்கதிகளைப் பற்றியுந் தொடர்ச்சியாக விசாரிக்கநிச்சயித்திருப்பதால், இன்று இத்துடன் முடிக்கின்றோம்.

## சந்தேகவிளக்கம்.

நாம் முந்தியபத்திரிகைகளிலொன்றில் க்ஷாமத்தைப்பற்றிசிலபிரஸ்தாபஞ்செய்திருந்தோமல்லவா? அதில்நாம்கூறிய சிலவிஷயங்களைப்பற்றி நமதன்பராகிய சிங்கப்பூர் நாராயணசாமிநாயகருக் கொரு சந்தேகந்தோன்றி அதை சென்றபத்திரிகையின்மூலமாக வெளியிட்டிருந்தனரல்லவா? 'க்ஷாமம் கடவுளைமறந்தியலும் கொடும்பாவிகளாகிய நாஸ்திகரறிந்துஉய்யவன்றிவேறன்று.' எனுங்கருத்தை நாம் விளக்கியதாக அவர்அபிப்பிராயப்பட்டு, போர்னியோமுதலாகியதீவுகளில் வசிப்போர்ஸர்வசண்டாளராயிருந்தும், அங்கு மாதமூன்றுமழையாகப்பொழிவதைத்தான் கண்ணுற்றிருப்பதால், இவர்களை கடவுள்மன்னித்தாளுகிறாரோவென, நமதன்பர்வினவுகின்றனர்.

இதற்குவிடையுரைக்குமுன்நாம் ஆகஸ்டுமாதத்திலெழுதிய உபந்நியாசம் சற்றுபிசகாக அந்வயிக்கப்பட்டதென்பதாய் எச்சரிக்கவேண்டிய தாவசியகமாயிருக்கின்றது. நாம் க்ஷாமத்தைஆஸ்திகருக்குப் பிரயோசனகாரியாக உரைக்க விரும்பினோமேயன்றி நாஸ்திகருக்கு சிக்ஷையாக்கவல்ல. தமது வினைகொடுமையாலோ மற்றெந்தகாரணத்தினாலோ கடவுளை உறக்கமுற்று மறந்து பலதொல்லைக்காளாகும்ஆஸ்திகராகியபுத்திரர்களைத்தட்டி எழுப்ப கடவுள் அனுக்கிரகஞ் செய்கின்றனரோயன்றி, தன்னைமுற்றும் நிராகரித்து அஹங்காரம் மேலிட்டு, பொய்த்தூக்கங்கொண்டநாஸ்திகனை எழுப்பவன்று. மெய்யாகவேமுற்றும் நித்திரைசெய்வோனை எழுப்பக்கூடுமாயினும், சற்றுமுறக்கமின்றிபொய்வேஷங்கொண்டவர்களைஎழுப்புவதசாத்தியமும், அநாவசியகமுமாகும். மேற்கூறிய அவர்களுடையவிசுவாச விசேஷத்துக்கும்பக்திவிசேஷத்துக்கும்அவர்களை சிக்ஷித்துசீர்ப்படுத்துவதேதக்கபிரதிகாரம். பிற்கூறியஇவர்களைசிக்ஷித்துசீர்ப்படுத்தாமல் மேன்மேலும்பாவதொழில்புரிந்து படுநரகவேதனையடைய யதேச்சையாக விட்டுவிடுவதே இவர்களுடைய ஆணவத்துக்கும் அவன் நம்பிக்கைக்கும் தக்கபிரதிகாரமாகும். பிதாவானவன்தனக்குபிரியமானபிள்ளையை சிக்ஷித்து சீர்ப்படுத்த முயல்வானேயன்றி, தான்முற்றும் வெறுத்தவனையன்றல்லவா ?

"தெய்வமுளதென்பார்தீயசெயப்புகிற்,
றெய்வமேகண்ணின்று நின்றொருக்குந் -
தெய்வ, மிலதென்பார்க்கில்லைத் தமின்பு
ல்தவர்க்கன்றே, பலகாலுஞ் சொல்வார்
பயன்."

க்ஷாமத்துக்குக்கடவுளின் அருளையன்றி வேறுகாரணத்தைச்செப்பக்கூடாமையால்இஃது நாஸ்திகருடையதுர்வாதத்துக்குத்தகுந்தசமாதானமாவதுமன்றி அவர்களறிந்து வழிபடக்கூடிய குறியாகுமென்றும்நாம்நாஸ்திகரைஎச்சரித்தோமேயன்றிஅவர்கள்பொருட்டுசிக்ஷையாகஅது விதிக்கப்படுகிறதென்பது நமதுகருத்தல்ல. ஆகையால்நமதன்பர் கண்டதீவுகளில்வாசஞ்செய்பவர்கள் க்ஷாமமின்றிக்ஷேமத்தோடுவாழ்வதைப்பற்றி நாம் ஆச்சரியப்படவேண்டுவதில்லை. இவ்வுலகத்தில்

ணமைப்பற்றுகிற தீமைமுதலிய பலதுன்
ங்களும் நல்லோருக்கு பயனளிக்கும்படி
கடவுள் அநுக்கிரகஞ்செய்தாலும், நல்ல
வர்களுக்கு வறுமைமுதலிய இழிவையு
ம் கடவுளுண்டாக்குகின்றனரென நம்பு
வது சத்தியமுமல்ல நமதனுபவத்துககே
ற்றதுமல்ல. பொல்லாதவர்கள் துன்பமு
றுவதில்லையென்றும் சொல்லொணுது.
பொல்லாதவர்களையுறும் பொல்லாங்கை
ப்பாராட்டி பரிதபிப்பவர் வெகுசிலராத
லால், அவர்களுடைய துன்பங்கொஞ்ச
மாகத்தோன்றுவது மதிசயமன்று. ஆயி
னும் பொல்லாதவர்களடையும் துன்ப
மெல்லாம் அவர்கள் பொல்லாச்செயலக
ளினல் நேரே விளையுமேயன்றி, கடவுள
வர்களுக்கு சிக்ஷையாக விதிப்பதன்று.
பொலலாதவர்களை இவ்வுலகத்தில் சிக்ஷி
க்கவேண்டுமென்னும்விதியைக் சட்வுள்
வைத்துக் கொள்ளுவராயின், படுபாவிக
ளுடைய முழுமோசங்கள் உலகத்தில் வி
ர்த்தியடைந்து அவர்களுக்குச் சுகமுண்
டாக்க நேரிடமாட்டாதல்லவா. சற்றுஆ
ழமாக யோசிக்குமிடத்து,மேற்கூறியவா
று இவர்களைத்தண்டியாமல்விடுவதேஇவ
ர்களுக்குப்பெருந்தண்டனையாகும். இவ
ர்கள் இவ்வாழ்க்கையில் சுடப்படாது
கொழுத்து மதமேறி துர்நடக்கையி
ல் மேன்மேலும் ஆழ்ந்தி, இப்பிறப்பில்
கரையேறுவ தசாத்தியமாகின்றது. இஃ
தெவ்வாறுயினும்,நல்லவர்களுக்குமிவ்வு
லகத்தில் தெய்வீகமான பலதுன்பங்கள்
உண்டாகின்றனவென்பதற்கு சற்றும் ஐ
யமில்லை. மேலும் முன்னுக்கு இவர்கள
டையும் துன்பமெல்லாம் பின்னுக்கு நி
த்தியமான சுகமளிக்குமென்பதற்குஞ் ச
ந்தேகமிலலை. இஃது நமதனுபவத்துக்கு
ம்ஒத்தேயிருக்கின்றது.ஒருவன்தன்வா
லிபதசையை விளையாட்டிலுஞ் சந்தோ
ஷத்திலும்போக்குவானுயின் அவன்பின்
ன்னுக்கு தன்வாழ்க்கைமுழுமையும் தரி
த்திரனய் பெருந்துன்பமடையலாமல்ல
வா? இவ்வாறே காணிசோம்பல்கோடிய
ழிக்குமென்பதுபோல் க்ஷணகாலபோ
கத்தைவிரும்பிச்சோர்வடைவோமானுல்
நீங்கலாத்துன்பத்துக்காளாவோம்.இவ்வ
ற்பபோகங்களின்தன்மை எப்பொழுது
ம் முன்னுக்குஇன்பமாம் பின்னுக்கு நீங்
காத்துன்பம்விளைப்பதேயாம்.

“தொடங்குங்காற்றுன்பமாயின்பம்பயக்
கு, மடங்கொன்றறிவகற்றுங்கல்வி-நெடு
ங்காமமுற்பயக்குஞ்சின்னீரவின்பத்தின்
முற்றிழாய், பிற்பயக்கும்பீழைபெரிது.”

ஆதலின் நல்லோரிவ்வுலகிலடையும்ப
லதுன்பங்கள் அவர்கள் சிற்றின்பத்தை
வெறுத்து பேரின்பத்தை நாடும்படிசெ
ய்யஉதவுகின்றன. இத்துன்பங்களில்பய
மில்லாவிட்டால் அவற்றின்மோஹத்துக்
காளாகாமலிருப்பது அசாத்தியமாகும்.
நமது அஹங்காராதி துர்க்குணங்களைப்
பெருக்கச்செல்வமும்,அவற்றைநீக்கவறு
மையும் தகுதியானமருந்தாகும். வறு
மையுற்றபோதல்லாமல் இவ்வுலகமும் இ
வ்வுலகவின்பமும் அநித்தியமென்னும் உ
ண்மையானதுநமதுகருத்தில்ஆழப்படிவ
தில்லை. அவற்றைவெறுத்து அசத்தியத்
துக்குள்ளாகாமலிருககவும் சாத்தியப்ப
டமாட்டாது. இதுவன்றி சரீரஉழைப்பி
னுல் சரீரத்துக்கு பலமுண்டாவதுபோ
ல், பலஇடையூறுகளைச் சஹித்துபழகுவ
தினல் மனது திருடத்திலும் வன்மையி
லும்தீக்ஷண்ணியத்திலும்அதிகப்பட்டு உ
லகத்தில்நம்மைச்சூழ்ந்தபலமோகங்களை
நிரந்தரமாய்வெல்ல சக்தியுண்டாகிறது.

இவ்வாறு நல்லோருக்கு தீமையும்
நன்மை பயக்க, பொல்லாதோர்க்கு ந
ன்மையே தீமைவிளைக்கும். இஃது மற்
றேருலகத்தில் மாத்திரமேயென்று பிர
மிக்கவேண்டாம். இவ்வுலகத்துக்கும் ப
யன்படும். மின்னுவதெல்லாம்பொன்ன
லவென்னும் பழமொழியைக் கருத்திலி
ருத்தி நல்லோருடையவும்பொல்லாதோ
ருடையவும் சுகதுக்கங்களைப்பற்றிச் சற்
றுஆழ்ந்தவிசாரஞ்செய்யின்இவ்வுண்மை
தானுய்வெளியாகும். சிற்றின்ப வமித
போகத்தினல் விளையும் பிணிமுதலியது
ன்பங்களைப் பார்க்காவிட்டாலும், அவற்
றின்கண் பாமரருக்குண்டாகும் பேரவா
வையும் அவ்வவாவையடக்கவல்லது தி
ருப்திசெய்ய, சக்தியும் போதுமானசாத
னமும் இன்மையால் அவர்களடையும்க

வலையும், கலக்கமும், இவ்வின்பங்கள் தமைவிட்டகலுமெனுஞ் சிந்தையாலுண்டாகும்நீங்காதபயத்தையும் சற்றுயோசிக்குமிடத்து, பொல்லாதவருடைய இன்பத்தைப்பார்க்கிலும் நல்லோருடையதுன்பமே மேம்பாட்டுடையதாகும். ஆகையால் சர்வக்கியனுகிய நமதப்பன், நல்லவர்களை க்ஷாமமுதலியவற்றால்வருத்துவதும், பொல்லாதவர்களை க்ஷேமத்தால்சுகிக்கச்செய்வதும் அவருடைய கருணைக்க்கும நீதிக்கும் இசைந்ததென்றே நம்புகின்றோம். ஆயினும்இஃதிவ்வாறேயென சாதிக்க எம்மால்முடியுமோ? சர்வசக்தனும்சர்வக்கியனுமான நமதப்பன்புரியும் அபாரவிநோத விசித்திரபூரிதமான செயலின்நோக்கம் இன்னதென்றுகூற எமதுசிற்றறிவு துணியலாகுமோ? அவனருளியதெல்லாம் நன்மையும் நீதியும்உசிதமுமேயன்றி வேறன்று என்பதைநமது மனதுக்கு சாத்தியமான உபாயங்களாலும் யுக்தியாலும் ஞானத்தாலும் போதித்து அவனது சன்மார்க்கத்தைப்பற்றும்படியேவி, அவனைவிஸ் வாசத்தோடுவழிபடுவது நமதுகடமையும் நலமுமாகும்.

## கடிதக்குறிப்பு.

தஞ்சாவூரில் தர்மஸமாஜகாரியதரிசியென்று கையொப்பமிட்டு அனுப்பிய ஓர்கடிதம் எமதுகைக் கெட்டியது. அதிற்கண்ட வினக்களின் சுவரூபத்தையோசிக்கையில், அன்னோர் நூதனமாய் தர்க்கசாஸ்திரத்தின் பூர்வபாகமாகிய பிரகிரண பத்ததியைமாத்திரம் பார்த்திருக்கிறதாகக் காணப்படுகிறது. அப்படிக்கின்றி உத்தரபாகமாகிய பஞ்சவாதசுவரூபத்தையும் கற்றவராயிருக்கின் அவ்வாறான கேள்விகளைக்கேட்டேயிருக்கமாட்டார். அதிலுள்ள வினக்களுக்குப்பெரும்பாலும்எங்கள்விண்ணப்பத்திலேயே சமாதானம்கிடைக்கும். ஆகையால் புனருக்தியனவசியகமென்று விடைகொடுக்காது நிறுத்துகின்றனம். அவ்விண்ணப்பத்தை அவர்பூர்வபக்ஷம்செய்து பிரசுரப்படுத்துவாராகில் அப்போது அதைப்பற்றி யோசிப்போம்.

## வேளாண்மை.

### வியவசாயரசவாதம்.

சாதாரணமாக நம்மவர்கள் உலகத்திலுள்ளபொருள்கள் யாவும் பஞ்சபூதங்களின் விகாரமென்றுசொல்லுவார்கள். பஞ்சபூதங்களாவன பிருதிவி, அப்பு, வாயு, தேஜஸ், ஆகாயம். பிருதுவிஎன்றால் மண், அப்பு ஜலம், வாயு காற்று, தேஜஸ் நெருப்பு, ஆகாயமென்பதைப்பிரகிருதவிஷயத்தின்பொருட்டு ஒருதனியானபொருளாகநினைக்கவேண்டியதில்லை. இஃது நமதுஉணர்ச்சிக்கும் புலப்படாத அதிநுட்பமான காற்றையொக்குமென்பார்கள். ஆயினும் பொருள்கள் இதனால் விகாரப்படுவதில்லையாதலால், மற்றநான்கு பொருள்களும் தனியாகவாவதுவிகாரப்பட்டாவதுவீற்றிருக்கஇடமாயிருக்கும்ஓர்வெளியே ஆகாயமென்றுகொள்வோம். ஒருசுவற்றைத்தோண்டினால் தோண்டிஎடுக்கப்பட்ட அம்மண்ணிருந்தஇடமேஆகாயம். ஆனால் மண்தோண்டபபட்டஉடனே அங்குகாற்றுநுழைந்துபரவும். இங்கு ஒருவஸ்துவில்லாதவிடம் கிடையாது. இதைத்தந்திரத்தால்தான் உண்டாக்கவேண்டும். ஒருபீச்சாங்குழலைக் கொண்டுவந்து அதன்இழுப்புக்குச்சியாகிய மேல்மூடிக்குக் காற்றுக்கிடங்கொடாதபடி துணிசுத்தி அமிழ்த்தினால் அக்குழலில் உள்ளகாற்றெல்லாம் அடித்வாரத்தின் வழியாக ஓடிப்போய்விடும். அப்பொழுது அந்தத்வாரத்தைக்காற்றுநுழையாதபடி பந்தனஞ்செய்து பின்பு மேற்படிகுச்சியை மேலுக்கிழுத்துக்கொண்டால் அக்குழலில் காற்றொன்றுமில்லாத வெற்றவெளி அல்லது ஆகாயமுண்டாகும். இவ்வாறு ஆகாயம் மற்றபூதங்களுக் கிடமாயிருப்பதேயன்றி இது தனியானபூதமல்ல. இவ்வாகாயமில்லாது உலகத்தில் யாதொருபொருளுமிருப்பது அசாத்தியமாதலால் இதை ஒருபூதமாகவைத்துக் கொண்டார்கள். ஆயினும் உண்மையாகவே உலகத்தில்உள்ள பொருள்யாவும் பிருதுவி, அப்பு, வாயு, தேஜஸ் என்னும் நான்குபூதங்களின் விகாரமாகவேயிருக்கின்றன. இவைகளையன்றி ஒருபொருளுமில்லை. ஆதலால் இவற்றின் குணகுணங்களை செம்மையாகக் கண்டறிந்தோமாயின் சகலபொருள்களின்உத்பத்திலயவேறுபாடுகளை எளிதில் கண்டறியலாம்.

தன்னில்தனியாகி கலப்பல்லாததாய் இது

ரபொருளாகபிரிக்கக்கூடாததாய் இதரபொருள்உண்டாவதற்கு ஒரு மூலகாரணமாயாவதே பூதமென்றுசொல்லப்படும். இப்பூதங்கள்தனியாகவும் பிரத்தியேகமாகவும் பெரும்பாலும் காணப்படுகிறதில்லை. இரண்டல்லது பலகலந்தேயிருக்கும். நாம் சாதாரணமாக பூதங்களென்றுசொல்லப்பட்ட பிருதிவி, அப்பு, வாயு, தேஜஸ் இவைகள்நிஜமாகவே பூதங்களல்ல. இவைகளெல்லாம் கலப்புவஸ்துக்கள்தான். மண்ணில் அநேகபொருள்கள் அமைந்திருக்கின்றன. இவ்வகளையெல்லாம்ரசவாதிகள் வெவ்வேறாகப்பிரித்துக்காட்டமாட்டுவார்கள். அவ்வாறேஜலமுதலியவும் வேறுவேறாக பிரிக்கக்கூடும் மற்றபொருள்களின் கலப்பாலுண்டாகின்றன. ஆயினும் வேறுபொருள்களாக பிரிக்கக்கூடாதனவாயும் தம்மில்தாமேவிகாரப்படமாட்டாதனவாயும் சிலவஸ்துக்க ளிருக்கின்றன. இவைகள்தான்பூதங்களென்றுசொல்லப்படும். உலகத்திலுள்ள எவ்விதப்பொருள்களையும் நுட்பமாக பரிசோதித்தறிந்த இரசவாதிகள் மேற்கண்டபடி பிரிக்கக்கூடாதனவாயும் வேறுபடாதனவாயும் தன்னில்தனியாகி மற்றப்பொருள்கள்யாவற்றிற்கும் மூலகாரணமா யிருக்கிற பூதங்கள் - ௬௨. என்று நிச்சயித்திருக்கிறார்கள். இவைகளின்குணங்களெல்லாம் இரசவாதகிரந்தத்தில் விஸ்தாரமாகசொல்லப்படும். இரசவாதத்தைப்பற்றி நாம் பிரத்தியேகமாய் எழுதக்கருதியிருப்பதால் இங்குஅவைகளையெல்லாம் சொல்லுவது அவசியமன்று. கந்தமூலாதிகள் உத்பத்தியாவதற்குக் காரணமாயிருக்கும் பூதங்களைமாத்திரம் அடியில்விவரித்துக்காட்டுவோம்.

காட்டில்தாமாய்விளைகின்றனவும் நாட்டில் பயிரிடப்படுகின்றனவும்ஆன எல்லாகந்தமூலாதிகளில் அமைந்திருக்கும்பூதங்கள், ௧௮. அவைகளான, ஜீவமூலம், ஜலமூலம், நீர்ஜீவமூலம், கரிமூலம், சுத்தகந்தகம், காடிக்காரமூலம், இலவணமூலம், லவணத்திப்பி, பிளோரயின், ஸ்படிகமூலம், காரமூலம், இலவணகாரம், சுண்ணமூலம், காந்தக்கல், படிகாரமூலம், அயம், காந்தப்போலியேயாம். இப்பதினெட்டுபூதங்களுள்முதற்கூறப்பட்டபதினொன்றும் லோகதாதுக்களை அடக்காதபடியால் லோகசூன்னியங்களென்னப்படும். பின்கூறப்பட்டயேழும் சிலலோகங்களுக்கு ஆதாரமாயிருப்பதால் லோககாரிகளென்னப்படும்.

## உலோகசூன்னியபூதங்கள்.

**ஜீவமூலம்.** மூலகாரணமாகியபூதங்கள்பலவற்றுள்ளும் பிரகிருதியின்கண்விசேஷமாக அமைந்த ஜீவகோடிகளுக்கு சர்வாவசியகமாயிருப்பது இந்தபூதமே. இது வாயுஅல்லதுஆவிரூபமுள்ளது. இதைஜலரூபமாக்கப்பிரயத்தினப்பட்டும் இதுவரையிலமுடியவில்லை. இது ஸ்வேச்சையாகவும்பிரத்தியேகமாகவும் நம்மைச்சுற்றியிருக்கும் ககனவாயுவில் தங்கியிருக்கின்றது. வாயுவில் ஐந்திலொருபாகம் ஜீவமூலமென்றுசொல்லுவார்கள். இதுஜலத்திலும் மணற்கல்லிலும்மற்றும்சிலகற்களிலும் களிமண்ணிலும் உயிர்பிராணிகளிலும்கலந்திருக்கின்றது. உலகத்தில்ஒருபாதிமுழுதும் இந்த உபயோகமுள்ள பூதமாயிருக்கலாமென்று சிலர் எண்ணுகிறார்கள். இந்தமூலத்தை (கிளோரயிட் ஆப்பொடாஸ்என்னும்)சாம்பலுப்பைச்சுடுவதினால்எளிதிலுண்டாக்கலாம். இன்னும் அநேகஸாதனங்கள் இரசவாதகிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆயினும்இவைகளநமக்குப்பயன்படுதல் அருமையாதலால்அவைகளைச்சொல்லாதொழிகின்றோம். இந்தமூலத்திற்குநிறமில்லை, கண்ணுக்குத்தோன்றாது. சமானஅளவுள்ள சாதாரணகாற்றையும் ஜீவமூலத்தையும் நிறுத்துப்பார்த்தால் காற்றைப்பார்க்கிலுங்கொஞ்சங்கனமாயிருக்கும். இது ஜலத்தோடுஎளிதில்கலக்கிறதில்லை. இதில்பிரகாசமாய்த்தோன்றும்குணம் யாதெனில்நெருப்பைப்பெருக்கிவளர்க்கிறதேயாம். ஒருவர்த்தியைக்கொளித்தி இந்தவாயுநிறைந்த ஜாடிக்குள்விட்டால் அது ஜகஜ்ஜோதியாய்எரியும். மேலும்வத்தியைவெளியில்வாங்கி அவித்துச் செகப்பாயிருக்கும் அதினநுனியைமறுபடியும் சாடிக்குள்விட்டால் அது முன்போல பிரகாசமாகபற்றியெரியும். சாதாரணவாயுவில் இதுவிசேஷமாகக்கலந்திருப்பதினாலேதான் அதனிடத்து நெருப்பையூட்டிவளர்க்குந்தன்மை யிருக்கிறது. மேலும் காற்றி லிந்தபூதம் இல்லாவிட்டால் பிராணிகள் ஒன்றும் பிழைத்திருக்கமாட்டா. காற்றில்லாதவிடத்துப் பிராணிகளிறந்துபோவதே இதற்குசாக்ஷியாம். அதிகசந்தோஷத்தால் ஜனங்கள் பொங்கி இறந்துபோவதுபோல் இந்தஜீவமூலத்தைமாத்திரங்கொண்டாலும் பிராணிகள் இறந்துபோகும். ஆதலால் இது தனியாயிராமல் சகலவித வஸ்துக்களோடுஞ் சேர்ந்திருக்கின்றது. இதன்சேர்க்கையினாலேதான் பஸ்மங்களென்று சொல்லப்படும் பலவிதமருந்துகள் உண்டாகின்றன. இதன்முக்கியகுணங்கள்அவிந்துபோனவர்த்தியைக்கொளுத்துவதும் குளிர்ந்தஜலத்தோடு எளிதில் கலவாதிருத்தலும் வர்னம் வாசனையற்றிருப்பதுமே.

**ஜலமூலம்.** இதுவிசேஷமாகமேற்கண்ட ஜீவமூலத்துடன் ஜலத்தில் கலந்திருக்கின்றது. ஒருஅளவு ஜீவமூலமும் இரண்டளவு ஜலமூலமும்சேர்ந்துதான் ஜலமாகிறது. மேலும் - ௧௬ - அளவு ஜலமூலத்தின் நிறை ஒருஅளவு ஜீவமூலத்தின்நிறைக்குச் சமானமாயிருக்கும். ஆதலால் ஒருஜலஅணுவில் - ௮ - நிறைஜீவமூலமும் ஒருநிறைஜலமூலமும் இருக்கின்றன. இந்தஜலமூலத்தை எளிதில் செய்துகொள்ளலாம். எப்படியெனில் ஒருபழைய துப்பாக்கியின்குழை அல்லது வேறு இரும்புக்குழைகொண்டுவந்து அதில் இரும்பு அராப்பொடி போட்டு நெருப்புக்குக் குருக்கேவைத்து பழுக்ககாச்சினால் அக்குழையின் ஒருபக்கத்தில் ஒருபானையில் கொதிக்குஞ்சலத்திலிருந்துஎழும் ஆவிநுழையும்படிவிட்டால் மற்றொருவழியாக ஷ ஜலமூலம்உண்டாகும். இந்தவாயின்பக்கத்தில் ஒருவத்தியை கொளுத்திக்காட்டினால் ஷ ஜலமூலம் வெளுத்து சற்றே பசுமையான ஜ்வாலையோடெரிவதைப் பார்க்கலாம். இந்தஇருப்புக்குழையில் ஆவிரூபமாய் நுழைகிறஜலமானது பிரிக்கப்படுகின்றது. ஜீவமூலம் இரும்புடன்கலக்குந்தன்மையுள்ளதாதலால் குழையிலிருக்கும் இரும்புசன்னத்தோடுசேர்ந்து அதை பஸ்மமாக்கிவிடும். விடப்பட்டஜலமூலமோ அக்குழையின் மற்றொருவாயால் வெளியேவந்துவிடுகின்றது. மேற்கண்டவிதமாக ஜீவமூலம் இரும்போடுமிசிரமிக்கிறதென்கிறதை ஷ சன்னத்தைக் குழையில்வைககுமுன் நிறுத்து மறுபடியும் பஸ்மமானபிறகு நிறுத்துப்பார்ப்பதினால் பிரத்தியக்ஷமாகக்காணலாம். என்றால் ஸன்னத்திலும் பஸ்மம் அதிகபளுவாயிருக்கும். ஜலமூலத்தைச்செய்யுஞ் சாதாரணவிதம் மற்றொன்றுஉண்டு. ஒருபுட்டியில் கொஞ்சஞ்சலமும் சிலதுத்தநாகத்துண்டுகளும் கொஞ்சம் கந்தகத்திராவகமும் விட்டால் ஷ ஜலமூலம்உண்டாகும். அந்தப்புட்டியின்வாயில் ஒருகுழையைவைத்துமூடி ஜலத்தில் ஜலத்துடன் கவிழ்க்கப்பட்ட மற்றொருபுட்டியின்வாயில் சேர்த்தால் அந்த ஜலமூலம் கவிழ்த்தபுட்டியிலிருக்கும் ஜலத்தைநீக்கித் தான்அதில்சேரும். இந்தஜலமூலம் எல்லாவஸ்துக்களைப்பார்க்கிலும் மெத்தலகுவானபதார்த்தம். ஆதலால் இதைத்தான் புகைக்கூண்டென்றுசொல்லப்படும் ககனக்கூண்டுகளுக்குள் விடுவார்கள். இது சுத்தமாயிருக்கும்பொழுது இதற்குநாற்றமும் கிடையாது விஷத்தன்மையுமில்லை. ஆயினும் இதுபிராணத்தைக்காக்க உதவாது. ஜலத்தில்கலக்கமாட்டாது. நெருப்பின்மீதுவைத்தால் வெளுத்த பசுமைநிறமுடைய ஜ்வாலையோடு எரிந்து விசேஷகாங்கையுண்டாக்கினபோதிலும் மெத்தவெளிச்சங்கொடுக்கமாட்டாது.

**நிர்ஜீவமூலம்.** ஜலமும் எவ்விதமாக ஜீவமூலத்தோடுசேர்ந்து ஜலமுண்டாக்குகிறதோ அதுபோலவே நிர்ஜீவமூலம் ஜீவமூலத்தோடுகலந்து சாதாரணமான வாயுவையுண்டாக்கும். வாயுவில் இன்னுஞ்சிலபூதங்கள் இருந்தபோதிலும் ஜீவாஜீவமூலங்களிரண்டுமே முக்கியமானவை. இந்தநிர்ஜீவமூலத்தை மிகவும்இலேசாக செய்யலாம். காற்றுள்ள ஒருபுட்டியை ஜலத்தில்வைத்து அதில்கொஞ்சம் காடிக்கார (பாஸ்பரஸ்) த்தைச்சுட்டால் இந்தநிர்ஜீவமூலம் உண்டாகும். சுடுகிறதினால் காற்றிலுள்ள ஜீவமூலம் காடிகாரத்தோடுகலந்து எரிந்துபோவதினால் நிர்ஜீவமூலம் புட்டியில்தானே நிற்கின்றது. இதைஜலரூபமாகவாவது கட்டியாகவாவது செய்யக்கூடாது. இதற்கும் வாஸனையில்லை. இதில் ஒருதீபத்தைக் காட்டினால் உடனே அவிந்துபோகும். இதனிடத்தில் பிராணத்தைக் காக்கும்குணமில்லை. ஒருபுழுபூச்சியை இதில்விட்டால் உடனேசெத்துப்போகும். இதினால் இதுவிஷத்தன்மையுடையதென்று நினைக்கக்கூடாது இதைஸ்வாசிக்கும்பொழுது பிராணாதாரமான ஜீவமூலம் இல்லாமையினாலேதானே இதில்விட்டபிராணிகள் இறந்துபோகின்றன.

---

## மநுநூல்

### மூன்றாம் அத்தியயாம்.

௧. ஆசாரியனிடத்தில் சிஷியனுக்குப்பிரம்மசரியவிரதமானதுமூன்றுவேதங்களிலும் முறைப்படியே முப்பத்தாறு அல்லது பதினெட்டு, அல்லது ஒன்பதுவருஷம் அல்லது வேதாத்தியனம்பண்ணுமட்டும் (செய்யத்தக்கதாம்.)

௨. நியமந்தப்பாத பிரம்மசாரியானவன் மூன்றுவேதம் (மூன்றுவேதத்தின் சாகைகளும்)அல்லது இரண்டுவேதங்கள் (சாகைகள்) அல்லதுஒன்று (ஒருசாகையையாகிலும்) அத்தியயனம் செய்தபிறகு கிரஹஸ்தாசிரமத்தை அடையவேண்டும்.

௩. அப்படி நியமங்கெடாத பிரம்ம

சரிய வ்ருதத்தில் மிக்கசிறந்த வனும்† வேதமத்தியயனம்செய்தவனும், மாலைக ளால் அலங்கரிக்கப்பட்டவனும் சிறந்த ஆஸனத்தி லுட்கார்ந்து மிருக்குமவனை (பிரம்மசாரியை) பிதாவானவன் (ஜனகபி தா = தந்தை, இல்லாவிட்டால்உபதேசபி தா = குரு) முதலில் பசுவினால் (என்றால் பசுவின்பால் முதலியவைகளால்செய்தம துவர்க்கத்தினால்)பூஜிக்கக்கடவான்.

ச. த்விஜபிரம்மசாரியானவன் தான் நியமப்படிக்கு விரதஸமாவர்த்தனம் செ ய்து குருவின்அனுமதிபெற்று (பின்பு) ஸ்வஜாதியாகியும் நற்குறிகளுள்ளவும்,ம னைவியை விவாஹம் செய்துக்கொள்ளக் கடவான்.

ரு. ஆறுதலைமுறைக்குள் தாய்வம்ச த்தில் உதிக்காதவளும், தந்தையின்கோ த்திரத்தில் பிறக்காதவளும் ஆனகன்னி கை த்விஜர்களுக்கு விவாஹத்திற்கும் பரிசுத்தமாகிய ஆலிங்கனத்துக்கு யோக் கியமாக விருக்கின்றாள்.

சா. மஹத்தானதும்(மிகபெரியதும்) பசுஸம்பத்து, ஆண்பெண்ணுடுகள், தன தான்னியசம்பத்து, முதலியவைகளால் நிறைந்தாயினும், சிறந்ததாயினும், கீழ்ச் சொல்லப்படும் பத்துஸ்தலங்களில் வி வாஹத்திற்கு (த்விஜனால்)(பெண்)கிரகி க்கதக்கதன்று.

எ. (ஜாதகர்ம்மநாமகரணம்முதலிய) கர்மங்களற்றவும், ஆண்பிள்ளை யில்லாத வும், வேதமோதாதவும், உடலில் அதிக மயிருள்ளவும், காசரோகமுள்ளவும்,அ ஜீர்னவியாதியுள்ளவும், காக்காய்வலியு ள்ளவும், குஷ்டரோகமுள்ளவும், யானை க்கால் விக்கமுள்ளவும் (ஆகியஇந்தக0கு லத்தையும் த்விஜன் தியஜிக்கக்கடவான்.) (இதுவரையில் கன்னிகையின் ஸ்தலமு னாக்கப்பட்டது. இனிகன்னிகையின்ஸ் வருபமுனாக்கப்படுகின்றது.)

அ. செம்மட்டைமயிருள்ளவும், ஆ கார்த்திற்கதிகமாகிய உடலுள்ளவும்,ரோ கியும், ரோமமில்லாதவும், அதிகரோம முள்ளவும், கடினமானபேச்சுள்ளவும்,பி ங்களவர்ண கண்விழிகளுள்ளவும்;

கூ. நட்சத்திரம், மரம், நதி, தாழ்ந்த வம்சம், மலை, பக்ஷி, பாம்பு, தாஸன் (அ டிமை)அல்லது பயமுண்டாக்கும் எவ்வ கைஉருவத்தின் பெயருமுள்ள (கன்னி கையை த்விஜன் விவாஹம்செய்துகொ ள்ளத் தக்கவனுகான்.)

க0. அழகிய பூர்ணஅங்கமும், மதுர மாய் அழைக்கத்தகுந்த பெயருள்ளவும், அன்னபக்ஷிக்கொப்பான நடையுள்ளவு ம், ஆகாரத்திற்கடுத்தபற்களும் ரோமங் களுமுள்ளவும், மிகவும்மெதுவான (மெ ல்லிய) அங்கமுள்ளவும், (கன்னிகையை த்விஜனானவன்)விவாஹம் செய்துகொள் ளக்கடவான்.

கக. புத்தியிற்மிகச்சிறந்தவன், ஸோ தரனற்றவளும் தகப்ப னின்னானென்று அறியக் கூடாதஇடம் பிறந்திருப்பவளு மாகிய ஸ்திரியை தர்மவிவாஹம் செய் துகொள்ளத் தகாதவனாகின்றனன்.

க௨. துவிஜர்கள் முதலில்ஸஜாதிஸ்த்ரீ யை விவாஹம்செய்து கொள்வது உத் தமமென்றுரைகக்கப் படுகின்றது. மறுப டிவிவாஹம் செய்துகொள்ள மனமிரு க்கில் ஜாதிகளின்முறைப்படியே (க்ஷத்தி ரியஜாதிமுதல் சூத்திரஜாதிவரையில்)வி வாஹம் செய்துகொள்வது சிறப்புள்ள தாகின்றது.

கங. சூத்திருக்கு சூத்திர்ஜாதியிற் பிறந்தஸ்திரீயும், வைசியஸ்திரீயும் சூத்தி ரஸ்திரீயும், வைசியனுக்கும்; க்ஷத்திரிய னுக்குக்ஷத்திரஸ்திரீயும் சூத்திரவைசிய ஸ்திரீகளும்த்விஜனுக்கு த்விஜஸ்திரீயும், மற்ற (தாழ்ந்த)மூன்றுவகுப்பிலும் பிறந் தஸ்திரீகளும் விவாஹத்திற்கு யோக்கி யமாகின்றனர்.

† ஜனகபிதாவே முக்கியமாக வேதாப்பி யாசம் பண்ணிவைக்க வேண்டியதென்றும் அப்படிக்கில்லாதபக்ஷத்தில் ஆசாரியனிடத் தினின்றும் செய்தக்கொள்ளவேண்டியதெ ன்று குல்லூகபட்டர் விரித்துரை இதற்கு ச்செய்திருக்கிறார்.

கச. சூத்திரஸ்திரீயானவள் பிராம்ஹணக்ஷத்திரியாதிகளுக்கு எப்டிப்பட்ட ஆபத்திலும் (முதல்) விவாஹத்திற்குத்தகுந்தவளென ஓரிதிஹாஸத்திலும உறைக்கப்படவில்லை.

கரு. மோஹத்தால் (முறைதப்பி)சூத்திரஸ்திரீயை விவாஹம்செய்துகொளளும் த்விஜர்கள் (என்றுல் பிரம்மக்ஷத்திரிய வைசியர்கள்) தங்களுடையகுலத்துடன் சூத்திரத்தன்மை அடைகின்றனர்.

கசு. சூத்திரஸ்திரீயைவிவாஹம்செய்துகொள்வோர் (பிராம்ஹணர்) அத்திரியுடையவும், உத்தியகுமாரராகிய கவுதமருடையவும் அபிமதப்படிக்கும் (என்றுல் பிரஷ்டர் எனப்படுவர்) (அப்படிவிவாஹம்செய்துகொள்ளும் க்ஷத்திரியர்)புத்திரஜனனமாகிய உடனே சவுநகருடைய அபிமதப்படிக்கும் ; (அப்படிவிவாஹம் செய்துகொள்ளும் வைசியர்)தன் மகனுக்குமகன்பிறந்தஉடனே என்(பிரகுவின்)அபிமதப்படிக்கும், விரைவில் பதிதர்களாகின்றனர்.

கஎ. சூத்திரஸ்திரியை (முதல்)விவாஹம்செய்துகொள்ளும்பிராம்ஹணன்அதோகதியடைகின்றுன். அப்படிக் கூடுவதால் புத்திரோத்பத்தியாலுல் பிராம்ஹண்ணியத்தினின்றுந்தன்யோக்கியதைஇழக்கின்றுன்.

கஅ. (த்விஜன்)தைவம், பிதிரு, அதிதி,முதலியகிரியைகளெல்லாம்அவளையே முன்னிட்டுச் செய்யவேண்டியதாகையால், பிதிருதேவர்முதலியவர்(அக்கிரியைகளால்) புஜிக்கப்படமாட்டார்கள் ; அவ்வகைத்தொழில்கள்(அவளுடன்செய்வானுகில்) அவன்ஸ்வர்கம்அடைகிறதேஇல்லை.

ககூ. (நியமத்தைக்கடந்து)சூத்திரஸ்திரீயின்அதரபானம்செய்வோருககும் அவள்மூச்சிக்காத்தாலடிபடுபவனும், அவளிடத்தில்புத்திரோத்பத்தி செய்தவனுக்கும்,பிராயச்சித்தம்விதிககப்படவேஇல்லை.

உ0. நான்கு இனத்தோர்க்கும் இஹலோகத்திலும்பரலோகத்திலும், ஹிதமாயும் அஹிதமாயுமிருக்கும் எட்டுவிவாஹங்களையும் முறையே அறிந்துக்கொள்க

## பிரம்மதருமம்.

ரு - வது - அத்தியாயம்.

(க.) இப்பிரம்ஹாண்டத்தில் யத்கிஞ்சித்பதாத்தமுண்டோ (அதுவெல்லாம்) பரமேசுவரனுல் வியாபிககப்பட்டிருக்கறது. (பாபகர்மத்தைத்)தியஜித்து (பரமாநந்தத்தை) யனுபவி. எவனுடைய தனத்திலும் ஆசையைச்செலுத்தவேண்டாம்.

(உ.) ஸ்திரமாயும், ஏகமாயுமிருக்கின்றவும் (பிரக்கியான மயமானவும் அசலமாகவும்) இருக்கின்ற (அப்பிரம்மம்) மனதைக்காட்டிலும் வேகமுடையது (என்றுல் மனதாலுமதை அடையக்கூடாது.) அதை (கண்முதலிய) இதர இந்திரியங்களுமடையவில்லை. வேகத்தால் இதர (மனதுமுதலியத்) காட்டிலும் அது(பிரம்மம்) முன்னேசெல்லுகிறது. அதுஓடுகின்ற மற்ற (பொறிகளை) விட்டு முன்னே செல்லுகின்றது. அது ஓடுகின்றமற்ற (பொறிகளை) விட்டு முன்னேஓடுகின்றது. அது (பிரம்மம்)இருக்கையில், ஜலமும், (ஸர்வபிராணங்களையும் பரிக்காநின்ற) (பிராணிகளுடைய ஸகல சேஷ்டைகளையும்) தரிக்கின்றது. (என்றுல் ஸகலகாரியங்களும் ஸர்வாஸ்பத பூதனுன பரப்பிரம்மமிருக்கையில்தான் உண்டாகின்றது.)

ந. அது (பிரம்மம்) சலிப்பதுஞ்சலியாததுமாயிருக்கிறது. அது ஸகலவஸ்துக்களுக்கும்புறம்பாயும் ஸகலவஸ்துவும் அதற்குப்புறம்பாயு மிருக்கின்றது. (என்றுல் எங்கும் வியாபித்திருப்பதால் ஆகாயம்போல்பற்றுடையதும் பற்றுததுமாகவிருக்கின்றது.)

(ச.) (மோக்ஷம்பெற இச்சையுடைய)எவனுனல், ஸகலபூதங்களையும் (பரம) ஆத்மாவாகியபிரம்மத்தினிடத்திலும். ஸகலபூதங்களிலும் பரமாத்மாவையும்பார்க்கின்றுனே அவன் (அப்படிப்பார்ப்பதால்) ஜுகுப்ஸை (என்றுல் ஆகூயை) அடைகிறதில்லை.

(ரு.) அவர்(பரமாத்மா)எங்கும்நிறைந்தவர்; காந்தியுடையவர்; பரிசுத்தமான

வர்; பாபமற்றவர்; ஸர்வதர்சி; (மனதையாளத்தக்க) விவேகி; ஸகலபூதத்துக்கும்மேலானவர்; தானுயுள்ளவர்; அவர் (பிராணிகளில்) அதின் இயல்புகளுக்குத்தக்கபடிப்பயன்களை சாக்ஷி வதமாக அமைக்கின்றார்.

ஐந்தாவது-அத்தியாயம்

முற்றிற்று.

---

## பேகன்வியாசம்.

### சத்தியத்தைப்பற்றியது.

சத்தியமாவதென்ன? என பரிஹாஸகரனாகிய பைலட் சொல்லி விடைபெறநின்றானில்லை. மயக்கத்தில் சந்தோஷமடைந்தவர்களாய், மனனத்திலும் செயலிலும் ஸ்வேச்சையடைய முயன்று எதிலும் நம்பிக்கை வைப்பது பந்தமென கருதுகின்றனர். அப்படிப்பட்டதத்துவக்கியானிகள் இப்பொழுதில்லையாயினும், இத்தன்மையோராகிய சலனசித்தமுளசிலர் இக்காலத்திலுமுளர். ஆயினும் இவர்களுக்கு பூர்வகாலத்தாரைப்போல் அவ்வளவு ரக்தபுஷ்டியில்லை. சத்தியத்தைக்காண்பதினுலுள்ள பிரயாசை உழைப்பு இவற்றாலாவது, அல்லது அஃதைக்காண்பதினால் மனிதருடையஎண்ணங்களுக்குண்டாகும் நிர்பந்தமாவது மனிதருக்கு அசத்தியத்தைப்பிரயப்படுததுவதில்லை. மற்றும் அவ்வாறுசெய்வதுஅசத்தியத்தின்கண் ஜனிக்கும் ஸ்வபாவமான கொடியவிருப்பமேயாம். பிற்காலத்திய கார்க்கியதத்துவக்கியானிகளிலொருவன் இவ்விஷயத்தைப்பற்றி விசாரிக்கப்புகுந்து, கவிகளைப்போல சந்தோஷத்தையுண்டாக்காதவிடத்தும் வர்த்தகரைப்போல் பிரயோஜனத்தைவிரும்பாதவிடத்தும், பொய்யின்நிமித்தமாகவே பொய்யைவிரும்பச்செய்வது யாதென்றறியமாட்டாமல்திகைத்தனன். என்றாலும்என்னாலுஞ்சொல்லமுடியாது.இதேஉண்மையானது. போர்வையற்ற,திரந்தபகல்வெளிச்சம்.இது உலகவேஷங்களையும,கூத்துகளையும், விஜயங்களையும், தீபவெளிச்சத்தைப்போல் அவ்வளவுசிதமாயும்ரம்மியமாகவும் காட்டுவதில்லை. சத்தியம் பகலில் மிகமதிக்கப்படும் முத்தின்விலைபெறலாகும். வேறுபடும் வெளிச்சத்தில் நன்குமதிக்கப்படுகிற வச்சிரத்தின் மதிப்படையமாட்டாது. பொய்யின்கலப்பென்று மினிமைபுகட்டும். மனிதருள்ளத்தினின்றும் வீண்மதம், வீணாசை, பொய்ம்மதிப்பு, யதேச்சையான மனோபாவனைகள் முதலியவை நீக்கின், அநேகருடைய மனம் மிகவொடுங்கி, துக்கத்தாலும் தாபத்தாலும் நிறைந்து, தங்களைத்தாங்களே வெறுப்பார்களென்பதை யாரேனுஞ்சந்தேகிப்பாரோ? பாதரிகளிலொருவன் காவ்வியங்கள், மனோபாவனையைப்புகட்டியும் பொய்யின்நிமலாயிருத்தலினால் அது அசுரபானத்துக்கொப்பாகும், என்று அதிகடுமையோடும் உரைத்தனர். ஆயினும்நாம்முன்பு கூறியதீமையைவிளைப்பது மனதிலூடுருவிச் செல்லும்(காவ்வியமாகிய)பொய்யன்று; மற்றதிலூறி, நிலைகொள்ளும்பொய்யே. மனிதருடைய விபரீதகொள்கையிலும் பாசத்திலுமிவை எவ்வாறாயினும், தன்னைத்தான்மாத்திரமே அறியக்கூடிய சத்தியமானது, அதை அபேக்ஷித்து நேசித்தல் அல்லது மணம்புரியவேண்டுதலையொக்கும் சத்தியவிசாரணையும், அதன் சாநித்தியமாகிய சத்தியஞானமும், அதையனுபவித்தலாகிய சத்தியவிஸ்வாஸமும், மனிததன்மைக்கு ச்ரேஷ்டமான நலமாகும். (தொடரப்படும்.)

---

## தைத்திரியோபநிஷத்து.

### எ - வது அநுவாகம். †

பூமி, வானம், வெளி, திக்கு, விதிக்கு, (எனஇவ்வைந்தும்உலகபங்திகள்,)—அக்னி. வாயு, சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், (என இவ்வைந்தும்தேவபங்திகள்,)—அப்பு, ஓஷதி, மரம், ஆகாயம், ஆத்மா, என இவ்வைந்துபஞ்சபூதங்களும்,—பின்பு அத்தியாத்மாவுரைக்கப்படுகின்றது.—பிராணம், வியானம், அபானம். உதானம், ஸமானம், என ஐந்தும் வாயுபங்திகள்.—கண், செவி, மனம், வாக்கு, தோல், (எனஇவ்வைந்தும் இந்திரியபங்திகள்)—சர்மம், மாம்ஸம், நரம்பு, எலும்பு, மூளை, அல்லது, கொழுப்பு, (என இவ்வைந்தும் தாதுபங்திகள்)—அவ்வனைத்தையும்முறையேகல்பித்துவேதம் ‡ உரைத்தது.—(என்னவெனில்) மேற்கூறிய இவை

---

† இதுவரையில் பிரம்மத்தின் உபாசனமார்க்கம் வியாஹ்ருதிகளால் (மறைப்பொருளுள்ளசப்தங்களால்) உரைக்கப்பட்டன. இவ்வனுவாகத்தில் அதிபூதம் அத்தியாத்மம் முதலியவைகளால் பங்தியாக பிர்ம்மத்தின் உபாஸனையின் மார்க்கம் காண்பிக்கப்படுகின்றது.

‡ அல்லது ஓர்ரிஷிஎன்பதும் இதின்பொருளாம்.

எல்லாம் வரிசையாயுண்டாக்கப்பட்டன.—(அதிபூதம் அத்தியாத்மம்) முதலியவற்றுள்வெளியிலிருக்கும் அனைத்தையும் சுத்திக்கொண்டிருக்கிறது. (மேற்கூறிய அனைத்தும் ஓர் ஆத்மமே ஆளுகின்றதென அறிவோன் பிர்ம்மத்தின் ஆத்மாவாகின்றான்.)

---

## மாத்ருவாச்சல்லியம்.

மாதாவினுயர்ந்த மாண்புடைகாப்பு,
பூதலத்தில்லைப் புதல்வருக்கென்றும்,
தன்னுயிர்நீங்கினுந் தன்மகன்கைவிடாள்,
அன்னையினன்பினுக் களவில்லையென்றுமே.

பிரான்சுதேசத்தில் சிலவருஷங்களுக்குமுன் நடந்த லாவெண்டியுத்தத்திலோர் வீரன் பலசண்டைகளில் காயப்பட்டு பலயீனமடைந்திருந்தவனை அடுத்தநாண்டிசுநகரத்துக்குக்கொண்டுபோகவேண்டியதாயிருந்தது. வழியில்சத்ருபயம் விசேஷமாயிருந்தமையால், இஃது சுலபசாத்தியமாயிருக்கவில்லை. அன்றியுமிவன் தாயானவள் இவனுடன்சென்று தன்தைரியத்தாலும்தன்வேலைக்காரனுடைய விசுவாசத்தாலும் சத்துருவைஜயித்துமகனைக்காப்பாற்றலாகுமெனநிச்சயித்துச்சென்றனள். இவள்தைரியத்துக்குத் தக்கபடியே நெடுந்தூரம் யாதொரு அபாயமில்லாமலே பிரயாணம்நடந்தது. இவளும் இனிகொஞ்சதூரத்தில் தன்கக்ஷியார் இரங்கியிருக்கும் பாளையத்தைச்சேரலாமென சந்தோஷத்தோடு செல்லவே சற்றுநேரத்துக்கெல்லாம் ஒருவனத்திலிருந்து நாற்பக்கங்களிலும் துப்பாக்கி சத்தங்கேட்டனள்; உடனே சத்துருக்களும் தன்வண்டியைச்சூழ்வதைக்கண்டுதான் ஆயுத்தப்படுத்தியிருந்த பிஸ்தோல்களைச் சுடப்போனாள். அன்றியும் நிமிஷத்துக்குள் அநேக குதிரைப்போர்வீரர்கள்வந்து சூழ்ந்துகொண்டு அவர்களிலொருவன் இவளை வண்டிவிட்டிறங்கும்படி மரியாதையாகத்தானே சொன்னான். இதைக்கேட்ட தாயானவள், தானிறங்க மாட்டேனென்றும், தன்வசத்தில் ஒப்பிக்கப்பட்டிருக்கிற ஒருசிறுவன் மரணாவஸ்தையிலிருப்பதாயும், அவனது தௌர்பாக்கியஸ்திதியைப்பாராட்டி, அவனை தொந்திரவு செய்யாமல் விட்டுவிடும்படியாயும் பரிந்து கேட்டுக் கொண்டனள். அதற்கப்போர் வீரன், இவன் இன்னானென்பதை யுணர்த்துவாயாகில் அப்படியே விட்டு விடுகிறேனென்றுசொல்ல, அதற்கவள் தன்சொந்த புத்திரனென்று விடையுரைத்தாள். ஆயினும் இவள்வாய்குளரலோடும் சரீரநடுக் கத்தோடும் பேசியதைக்கண்டு அவர்களுக்குச் சந்தேகமுண்டாய், அவளை வண்டிவிட்டிரங்கும்படியாகவும், அப்படியிரங்காதபக்ஷத்தில், அவளோடு அச்சிறுவனையுஞ் சுட்டுப்போடுவதாய் பயமுறுத்தினார்கள்.

இதற்குச் சற்றும்அஞ்சாது தாயானவள் மகனுக்குமறைவாகநின்று சத்துருக்களைக்கணக்கிட்டு, அவர்கள் ஒன்பதுபேராயிருப்பதையறிந்து எவ்விதத்திலும் எதிர்த்துப் போர்செய்வதே சரியென்று நிச்சயித்துக்கொண்டு, தன்வேலைக்காரன் சஹாயத்தோடு சண்டைசெய்யஆரம்பித்து இவள்தன்கையினால் இரண்டுபேர்களைக்கொன்றுவிட்டாள்ஆயினும்உடனேதன்வேலைக்காரன்கொல்லப்பட்டதுமன்றி, தன்னுடன்வந்தகாவலும் மடிந்து தன்மகனுக்கும் காயமுண்டாயிற்று.

தனதுமகன்ரத்தமோடுவதைக்கண்ட தாயானவள் வீராவேசங்கொண்டு அவன்சமீபத்திலிருந்த கத்தியைக் கையிலெடுத்துக்கொண்டு, வண்டியினின்றுகுதித்து வீரொன்றுகூச்சலிட்டுஅட்டஹாசஞ்செய்துசத்துருக்களின்மத்தியில் குதித்தனள். ஆயினுமவர்கள்இவளைச்சுலபமாய்ப்பிடித்துஆயுதத்தைப்பறித்துக்கொண்டு அவளையோர்மரத்தோடு சேர்த்துக்கட்டி அவள்கண்முன்பாக அவள்மகனை இழுத்துக்கொண்டு வந்து அவள்சமீபத்திலிருத்தி சுட்டுபோட எத்தனப்பட்டார்கள். அன்றியும்அவளுடையஅடத்தினால் கோபங்கொணடவர்களாய் அவளுக்கு வெறுப்புண்டாக்க வேண்டுமென்று அவனைத்தன்ரக்தத்திலேயேஉழன்று சாவதானமாய்ச்சாகும்படிவிட்டார்கள். இதற்குள்ளாகஅடுத்தபாளையத்திலிறங்கி யிருந்தஇவள்கக்ஷியார், வெடிதீர்ந்த சத்தங்கேட்டு, அம்பதுபேர் உடனே அவ்விடத்துக்கு வந்துசத்துருகளை ஜயித்துக்கொன்று விட்டார்கள்.

திடீலெனதனக்கு நேர்ந்தசகாயத்தைக்கண்ணுற்றுதாயானவள், பொங்கி ஸ்மாரகமின்றிவிழுந்துவிட்டாள். அவனைஅவள்வண்டியில்தானே யெடுத்துக் கொண்டுபோய் அடுத்தபாளையத்தில்விட்டார்கள். இவ்விடம் அவள்மூர்ச்சைதெளிந்து தன்மகனெங்கேயெனக்கேட்கஒருவரும் அறியோமென்றார்கள். இவள்மகன் வெட்டுண்டசத்துருக்களில்ஒருவனென்றெண்ணி இவர்கள் வந்து விட்டார்கள் எனவறிந்து தன்னோடு மீண்டு மந்த இடத்துக்கு வரும்படி அவர்களைப்பரிந்துக்கேட்டுக்கொண்டனள். "என்மகன் இன்னும் உயிரோடிருக்கின்றான் - உங்கள் உதவிக்குதக்கவன். உங்கள்கக்ஷியிலேயேஅவன் தைரியத்தோடுபோர்செய்தவன். அய்யோ சத்துருக்கள் மீண்டும் வந்து' சூழ்ந்துகொ

ண்டார்களோ என்னமோ" வெனதுக்கித்தனள். உடனே அவள்சினேகிதர்கள் அவளையிட்டுக்கொண்டுஅவ்விடஞ்சென்றார்கள். மற்றவர்களுக்குமுனபாகச்சென்ற சிலரைக்கண்டு இவள்மகன்ரக்தமயமானவஸ்திரத்தால் கட்டப்பட்டதலையைபின்வாங்கி,வருபவர்கள்சத்துருகள்என நினைத்து மறைத்துக்கொளள யத்தனப்பட்டான். அவர்களுடனே இவன் சத்துருவென்று பாவித்து இவனை யடித்து எரிந்துவிட்டார்கள். அன்றியும் இவன் சாகாமல் மூர்ச்சை தெளிந்து தலையெடுக்க முயற்சிசெய்கையில் இவன் தாயானவள் மற்றவர்சளுடன் அவ்விடம்வந்து சேர்ந்தனள். இவனைக்காணவீரிட்டு மேல்விழுந்துமறித்தவள்போலவாயினள். இவ்வளவுஇடையூற்றிக்காளாகிய தாயையும்பிள்ளையையும் அவர்கள் பிணம்போல்தூக்கிக்கொண்டுபோய் பாளையம்சேர்த்தார்க்ள். அன்றியும் அச்சிறுவன் சாகாமல் பிழைத்துக்கொண்டான். பின்பவள்தனநகரம்கொண்டுபோய் அவனைதன்விசேஷமுயற்சியினால்முற்றும் சொஸ்தப்படுத்தி, பாதுகாத்தனள்.

## மிஸ்கார்பெண்டர்.

இப்பேர்கொண்ட சீமாட்டி அங்கிலேய தேசத்திலிருக்கும் பிரஸடல்நகரவாசியாய் பெயர்பெற்ற சீருள்ளபெருங்குலத்திற்பிறந்தவள். இவள் தன்வாழ்நாள்முழுமையும், மனிதருடையபொதுநன்மையின்பொருட்டுவிடாமுயற்சியோடு பாடுபட்டு, அளவிறந்தநன்மை செய்திருக்கின்றனள். இப்பெருமாட்டி, நமது தேசத்துக்கும் முக்கியமாய் நமது பெண்களுக்கும் நன்மைபுரியும்படி, தன் சுதேசம் விட்டு பெருங்கடல்கடந்து இங்கு வநதிருக்கின்றனள். இவளது அற்புதசெயல்களைப்பற்றியும், இவளுத்தேசியத்தைப்பற்றியும், (இடசங்கோசத்தினால்) வருகிறபத்திரிகையில் சவிஸ்தாரமாக செப்பக்கருதுகின்றோம்.

## நிருபம்.

தத்துவபோதினிஎடிட்டர்அவர்கட்
கநந்தவந்தனம்.

ஐயா.

யானிதனடியில்வரையுஞ் சிலபுதுசமாசாரங்களுக்குத் தங்கட்பத்திரிக்கையிற் சிறிதிடம் தருவீர்களென்றுத்தங்கள் மேலானகனத்தை வேண்டாநிற்கின்றனன்.

நம்முடையநேயராயும், சுதேசிகளாயும் இருக்கிற இந்துக்களிற் சிலர்பெண்களுக்குக் கல்விபயிற்றலாமென்றும் சிலர் மனப்பூர்வமாய்ப்பயிற்றலாமென்றறிந்தும் உலகத்துசனங்களுக்குப் பயப்பட்டுக் கூடாதென்றும் வேறுசிலர் "தான்பிடித்தமுயலுக்குமூன்றேகால்"என்றுபடிக்கக் கூடவேகூடாதென்றும்இப்படிபலவிதஎண்ணங் கொண்டிருக்கிறார்களென்பதற்கையமில்லை.

இனிநான்கண்டபுதுமையைச் சொல்லுகிறேன். சற்றுகவனமாய்க்கேட்கும்படிபிரார்த்திக்கிறேன்அஃதாவது,இரண்டுதினத்தின் முன்முன்றும்வகுப்பிற்சேர்ந்தஒரு கனவான்எங்கள்வீட்டுக்குவந்திருந்தார். அவருக்குமெனக்கும்சடுதியில்மேற்கூறிய விடயத்தைப்பற்றி வாக்குவாதம் வந்து என்னுற் கூடியமட்டில் அவர் செப்பியகாரியங்களிலுள்ள பிழையைஎடுதது காட்டியதன்பின் அவர்ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. அப்போது அவர் "நீசீக்கிரத்தில் கிரிஸ்துமதமுள்ளவனுவாய்" என்று சென்னார். இது அவர்எதைப்பற்றிச்செப்பினரோ அறியிலன். இப்படி இந்துமதஸ்த ரெல்லாம் அநியாயமாய் சரியான விடயங்களைச் செய்யாமல், என்ன சொன்னாலும் கேட்காமல், குரங்குபிடித்ததைப்போல் தாங்கள்சொன்னதையே சரிஎன்றுவைத்துக்கொண்டிருப்பது நியாயமென வென்புன் புத்திக்குத்தோற்றவில்லை. இப்படிப்பட்டகியான சூனியர்களுக்கு எப்போதுகியானமுண்டாகும்படி, எங்குமுள்ளவராயும், அரூபியாயும் இருக்கப்பட்டதாயாபரப்பொருள் என்கிறகடவுள் அநுக்கிரகஞ்செய்வாரோதெரியாது.

இங்ஙனம், உண்மைவிரும்புவோன்.

---

ம - ா - ா - ஸ்ரீ தத்துவபோதினியின்கர்த்தரவர்கட்கு, விண்ணப்பம்.

ஐயா.

திங்களூர்நதுலவும். அங்களூர்ரலர்பொழில், பெங்களூர்கண்டோன்மெண்டு, கிளார்க்குப்பேட்டையில் - ம - ா - ா - ஸ்ரீ மதுரைமுத்துப்பிள்ளையவர்கள்வீட்டில் விவேகிகள்சிலர்சேர்ந்து (வேதசமாஜபஜனைசபை) என்கிறபெயர்தந்து செப்டம்பர்மாதமுதல் ஆதிவாரங்சடோரும் மாலை ௬ - மணிமுதல் ௯ - மணிவரைக்கும்பஜனை செய்துக்கொண்டும், தததுவபோதினி முதலாகியதைவாசித்தும் - பிரசங்கித்தும வருகிறார்கள்.

அந்தசபை- சச்சிதாநந்தபரபிரும்மத்தின் கிருபையாலும் - தங்கள் - தத்துவபோதினி முதலியமுயற்சியாலும் நாளுக்குநாள் விருத்தியாகிக்கொண்டு வருமென்றுநம்புகிறேன்.

இங்ஙனம், தத்துவதர்சன்.

## பரம்பொருள்பேரில்

## தேவாரப்பதிகம்.

---

௧. அரனயன்றிருமாலென்னு-மாதிமுச்செயற்கோனாகிப்,
புரம்விரிசுடருமாகிப்-பொருளெவைக்காண்பதாகித்,
திரமிகவுற்றதாகித்-தீதிலாதவையுமற்ற,
அரியதோர்பொருளேயெம்மை-ஆண்டருளபயமின்றே.

௨. முத்தொழில்வல்லாய்நாளும்-முடிவிலாப்பொருளேயென்றன்,
கத்தனேயருள்நிறைந்த-காரணக்கடலேசுத்த,
வித்தகாசரணமின்றி-விதேயனின்பிழையைத்தீர்த்தும்,
அத்தநல்லுய்யவெம்மை-ஆண்டருளபயமின்றே.

௩. தொண்டர்கள்போற்றுநேயா-துப்பிலவாதிமூலா,
அண்டர்களறியாரூபா-ஆணொடுபெண்ணுமல்லாய்,
பெண்டிருமற்றதேவா-பிணியொடுபெருமையில்லாய்,
அண்டினேனின்றுநாதா-ஆண்டருளபயமின்றே.

௪. ஒப்பிலாப்பொருளேவல்ல-ஒருவனேயுருவிலானே,
தப்பிலாமுதலேஞானத்-தாதையேபயின்றோரற்ற,
துப்புள்ளவருளேநாளும்-துணையிலாவமதியோனே,
அப்புசூழ்புவியிலெம்மை-ஆண்டருளபயமின்றே.

௫. எதுயாம்சொல்வோம்பாரீர்-எழையாம்விளைத்தசெய்கை,
ஒதினால்பெருகுமையோ-உரைக்குமுன்னறியும்வல்லாய்ப்,
பாதகன்றுயரைத்தீர்க்கப்-பார்தனிலுன்னையன்றி,
ஆதமைக்காணேன்மூதே-ஆண்டருளபயமின்றே.

௬. பிறந்தநாள்முதலாயுன்றன்-பெருமையையறியாநின்றம்,
உறம்பெருமர்ச்சராதி-யுருக்களைநணுகியென்றன்,
மறமறுத்தாளுமென்று-மௌலினேன்மடையர்போல,
அறந்திகழ்நாதாவேதா-ஆண்டருளபயமின்றே.

௭. பொய்யொடுகாமஞ்சூது-பொருந்தியவயனாதீயோர்,
உய்வழியவர்களென்றே-யுறப்பெலாங்கோலமிட்டேன்,

செய்வழியறியாமூடன்-செய்பெரும்பிழைகள்போக்கி,
அய்வழிதன்னிலுய்ய-ஆண்டருளபயமின்றே.

அ. கன்னிலின்சுவையைவிட்டு-கைப்புறுவேம்பைகண்ணும்,
அன்னவராயநும்மின்-அருளின்பம்விட்டுப்பாரில்,
துன்னினேனையோ ! பாவி, துகளிலாப்பொருளே ! நீதி,
அன்னலே ! முதலே ! யெம்மை-ஆண்டருளபயமின்றே.

௯. பஞ்சமாபாதகத்தைப்-பகர்ந்துணராதமூடன்,
வஞ்சகங்கோபங்கர்வம்-வளவாகக்கொண்டசேடன்,
தஞ்சமோடஞ்சாப்பேயன்-தாஸரைமதியாக்கேடன்,
அஞ்சலாயடைந்தேன்பாரீர்-ஆண்டருளபயமின்றே.

௧௦. கரணமேயொத்துநின்னைக்-கனவிலுந்துதிக்காப்பாவி,
மரணமுமேலாதையோ ! திருமனுவாகிநின்றும்,
பரணமேவருமுன்சற்று-மதித்திடுஞ்செயல்கட்கெல்லாம்,
அரணமாய்நின்றேயெம்மை-ஆண்ருடளபயமின்றே.

இஃது, சிங்கபூர் - சித்திரகவி வெ. நாராயணசாமிநாயகரியற்றியது.

---

அன்பரோவேதமருள்பிர்ம்மமோராமல்,
அன்பில்புராணத்திலாழ்ந்தியே - வம்பான,
பொம்மைகளைப்போற்றிப்போராடிமாய்வதுவு,
நன்மையோசொல்வீர்நயந்து.

இஃது, பெங்களூர் - ஆ. ஐயாசாமிமுதலியார் இயற்றியது.

---

சந்தாதாரர்களுடைய அட்டவணை.

| | |
|---|---|
| மன்னார்குடி-இராமசந்திரராயர் | ௧ |
| ,, குப்புசாமிஅய்யர் | ௧ |
| ,, முத்துசாமிமுதலியார் | ௧ |
| தஞ்சை-சண்முகம்வேலாயுதநாடார் | ௧ |
| சென்னை-சுப்பராயசெட்டியார் | ௧ |

---

தனியான, ஒப்பற்ற, மெய்யறிவநந்த பிரும்மம், சாந்திபூர்ணம், அமிருதம், அதுஉருவுங்குற்றமுமற்றது. இதையறிந்தவர்அமிருதராவார்; மற்றவர்துக்கமேயடைவார்.

மெய்யேவெல்லும், பொய்யல்ல.

சென்னப்பட்டணம்,—தத்துவபோதினி அச்சுக்கூடத்தில், கா. தெய்வசிகாமணி முதலியாரால், பதிப்பிக்கப்பட்டது.